விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 28 திங்கட்கிழமை (13.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 25

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# 13 ஆவது அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டும்

## ஜனாதிபதி கோட்டா தெரிவித்ததாக சிங்கள இணையம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்புத்திருத்தச்சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் அத்திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதை மீளாய்வு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இரும்பகக்கடையில் தீ விபத்து

### யாழ் நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள இரும்பகக் கடை ஒன்றில் நேற்று மதியம் திடீரெனத் தீப்பரம்பல் ஏற்பட்டது.

இதனையடுத்து உடனடியாக யாழ் மாநகர தீய 23

## சிறுமி துஸ்பிரயோகம் இளைஞன் கைது

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவரை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக நெல்லியடி பொலிஸாருக்கு 23

## தமிழ் பேசும் சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்பேசும் இலங்கைச் சமூகத்தினரை உள்ளடக்கிய ஒரு மைப்பாட்டு உணர்வொன்று கட்டியெழுப்பப்படுவதன் மூலம் அனைவரும் இலங்கையர் என்ற சிந்தனை உருவாகும் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

2015 ஆம் ஆண்டிலிருந்து சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசியகீதம் 23

## முல்லை மூங்கிலாற்றில் மோ.சைக்கிள் மின்சார கம்பத்துடன் மோதி விபத்து



### பேரா பல்கலைக்கு தெரிவான மாணவன் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூங்கிலாறு பகுதியில் இளைஞன் செலுத்திய மோட்டார் வண்டி வேகக் கட்டுப்பாட்டையிழந்து மின்சார கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான 23

## இயக்கச்சியில் கஞ்சாவுடன் பெண் கைது

(முறிகண்டி)

இயக்கச்சியில் கஞ்சாவுடன் பெண் ஒருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக பெண் ஒருவர் நடமாடுவதாக பளை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பெண்ணை பரிசோதித்தனர். இதன் போது அவர் உடைமையில் 2 கிலோ 100 கிராம் கஞ்சா கைப் 23

## அமெரிக்க இராஜதந்திரி இன்று இலங்கை விஜயம்

### எம்.சி.சி. ஒப்பந்தம் குறித்து பேசுவார்

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளர் ஆலிஸ் வெல்ஸ் இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஆலிஸ் வெல்ஸ் இம்மாதம் 13 முதல்22 ஆம்திகதி வரை இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளார். 23

## பிரதமர் மோடியை சந்திக்க இந்தியா செல்கின்றார் மகிந்த

### 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்குமா?

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்வதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் இந்தியாவிற்கு செல்வார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. 23

## பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி கோட்டா இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுத்துள்ளார்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தை நடத்த வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்த நிகழ்வில் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பேச்சுவார்த்தைக்கு எமது தலைவர் இரா.சம்பந்தனிடம் அழைப்பு விடுத் 23

## விமானம் சுடப்பட்டமைக்கு எதிரொலி

## ஈரான் அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்

(தெஹ்ரான்)

உக்ரைன் விமானத்தை தவறுதலாக சுட்டு வீழ்த்தியதை ஈரான் ஏற்றுக்கொண்டுள்ளதை தொடர்ந்து ஈரானில் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

தலைநகர் டெஹ்ரானில் ஆயிரக்கணக்கானவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட் 23

## 19ஆம் அரசியலமைப்பை இரத்துச் செய்ய ஆதரவளிக்கமாட்டோம்

### எம்.ஏ.சுமந்திரன் செவ்வி



(கொழும்பு)

19ஆம் அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் 23

# அமெரிக்கா - ஈரான் போர் காரணமாக இலங்கைக்கு அச்சுறுத்தல் - சஜித்

(கொழும்பு)

அமரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் காரணமாக இலங்கைக்கு அச்சுறுத்தல் உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்

பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்



உரையாற்றுகையில், இலங்கையில் ஏற்கெனவே மத்திய கிழக்கு பிரச்சினையைக் காட்டிலும் நான்கு மடங்கு பிரச்சினை நிலவியது.

இந்தநிலையில் ஏ.சி.எஸ்.ஏ உடன்படிக்கையின் படி அமரிக்கா இலங்கையை முக்கிய தளமாக பயன்படுத்த முடியும்.

இந்தநிலையில் அமெரிக்கர்களின் பிரசன்னம் இருக்கும் இடங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி அமெரிக்கப் படைகள் இலங்கைக்கு வந்தால் இலங்கையும் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் தற்கொலை தாக்குதல் கள்கூட நடத்தப்படலாம்என்று அவர் எச்சரித்துள்ளார். (ம-3)


காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடத்தும்

### சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 173வது இசை ஆராதனை விழா அழைப்பு



இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம்: 15.01.2020 புதன்கிழமை (தைப்பொங்கல் தினம்) பி.ப 3.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

1. தொடக்கவுரை திரு.**பொ.இரவிச்சந்திரன்** (வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்)
2. ஈழத்துப் பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் 'மங்கள இசை' (1 மணித்தியாலம்)
3. ஈழத்துப் பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள், பக்கவாத்தியக் கலைஞர்கள் வழங்கும் 'பஞ்சரத்தின கீர்த்தனைகள்' (1 மணித்தியாலம்)
4. தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் விரும்பிய கலைஞர்கள் ஒவ்வொரு கீர்த்தனை வீதம் இசைத்தல் (1 மணித்தியாலம்)

**குறிப்பு**

- நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து சேவை யாழ்.கிளையிலிருந்து (இல.428, KKS வீதி, யாழ்ப்பாணம்) ஆரம்பமாகும். (யாழ்.வண்ணை சிவன் கோவில் அருகாமை)
- மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்**

(C-8982)



## மாடி வீடு விற்பனைக்குண்டு

**யாழ்.பிறவுண் வீதி ரயில் பாதைக்கு அண்மையாக அன்னசத்திரலேன் மற்றும் பலாலி வீதிக்கு அண்மையில் வேம்படிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 1 ½ பரப்புக் காணியில் உள்ள புதிய மேல் மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு. (கிணறு உண்டு)**

தொடர்புகளுக்கு:-

**075 041 4028**

**077 087 1396**

(C-8978)


## மரண அறிவித்தல்



### சிவலிங்கம் செல்வராணி

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் இல. 53, ஜெயந்தி நகரை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவலிங்கம் செல்வராணி நேற்று முன்தினம் (11.01.2020) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வேலு சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் கஜீபன் (சாரதி - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி), அமரர் நிரோஜன் கஜேந்தினி (யாழ்ப்பாணம்), சர்சிகா, ரஜித் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2020) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனந்தநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி

(C-8918)

*தகவல்:-*குடும்பத்தினர்
077 543 6444

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராசம்மா பொன்னுத்துரை

(மண்டைதீவு)



அன்னைமடியில் 1930.02.15

ஆண்டவன் அடியில் 2018.11.25

கண்ணிமைப் பொழுதினிலே காலன் உனை
கவர்ந்து சென்று காலம் ஒன்று ஆனதம்மா!
என்ன நினைத்தாயோ! எதைச் சொல்ல எண்ணினியோ!
ஒன்றும் புரியவில்லை! ஓடி வா மகளே!
என்ற குரல் இன்னமும் ஒலிக்குதம்மா
சொல்லாமல் சொர்க்கம்தான் வந்ததுவோ!
கனதியாய் மணி ஒலிக்க சடுதியாய் நாம் எடுக்க
காற்றினிலே வந்த செய்தி கனவோ? நனவோ!
என்றே எண்ணுமுன்னே நனவாக முடிந்ததம்மா!
ஓடி வந்தோம் உனை தேடி - எமைப் பெற்ற உடலை
கண்டோம் கதறினோம்! பேதலித்து நின்றோம் நாம்
அம்மா! என்ற சொல்லுக்கு அகிலத்தில் எதுவும் இல்லை
அன்னையே! ஐயாவுடன் சேர்ந்தாயோ!
அன்பு மகனை கண்டாயோ! அம்மையே!
அகல் விளக்கே! அழியா நின் நினைவும்
ஆறாத எம் துயரும் எம் விதி முடியும்
வரை விழித்திருக்கும் தெய்வமே!
நின் ஆத்மா தில்லைக்கூத்தன் திருவடியில்
நித்திய சுகம் பெற நித்தம் வேண்டிடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் **குடும்பத்தினர்**

**50, சபாபதி வீதி,**
**தலையாழி, யாழ்ப்பாணம்.**

(1860)

# இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து குருநகரில் நேற்று விசேட சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அதற்கமைய தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணி தொடக்கம் காலை 6 மணி வரை குருநகர்ப் பகுதியில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் தெல்லிப்பழை பகுதியிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். அதிலும் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எவையும் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரஞ்சனின் கைதில் பழிவாங்கல் இல்லை

## ஆளுநர் கமகே கூறுகிறார்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு அரசியல் பழிவாங்கல் செயற்பாடும் இல்லை என மத்திய மாகாண ஆளுநர், சட்டத்தரணி லலித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் எந்தவகையிலும் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறாது எனவும் அவர் தெரிவித்தார்.

தலவாக்கலை - லிந்துல நகரசபை, அக்கரபத்தனை மற்றும் கொத்மலை ஆகிய பிரதேச சபைகளில் நிலவும் உள்ளூராட்சி மன்றங்களின் குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று தலவாக்கலை டெனிஸ் கழக மன்றத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த ஆளுநர், "ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு அரசியல் பழிவாங்கல் செயற்பாடும் இல்லை. இந்த அரசாங்கம் ஒருபோதும் அவ்வாறு செய்வதில்லை.


ஆனால் இதனை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக ஒரு குறிப்பிட்ட கட்சி தனது அரசியல் நன்மைக்காக கூறி வருகின்றது. அது தவறானதாகும். இந்த விடயம் பொலிஸாருக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் உரிய முறையில் நீதியை நடைமுறைப்படுத்துவார்கள்.

இந்த விடயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்த நீதிமன்றங்களும் சட்டமா அதிபர் திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் உள்ளன. அவற்றின் ஊடாக நீதி நிலைநாட்டப்படும்.

எனவே தனிப்பட்ட முறையில் கருத்துக்களைத் தெரிவிக்காது குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இது குறித்த பொறுப்புகளை வழங்குவதே பொருத்தமானதாகும்" என மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்லுடன் வந்த உழவியந்திரத்தை மோதித்தள்ளிய கடுகதி புகையிரதம்

## மூவர் பாய்ந்து தப்பினர்





(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து காங்கேசன்துறை நோக்கி நேற்று மதியம் சென்றுகொண்டிருந்த கடுகதிப் புகையிரதம் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்ட உழவியந்திரத்தை மோதித் தள்ளியது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதிப் புகையிரதம் வீமன்காமம் சந்தை ஒழுங்கையைக் கடக்கும் போது கல் ஏற்றி வந்த உழவியந்திரம் விபத்தில் சிக்கியது.


குறித்த விபத்து இடம்பெறும் போது உழவியந்திரத்தில் பயணித்த மூவர் பெட்டியை விட்டு வெளியில் பாய்ந்தனர்.

இதனால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் உழவியந்திரத்தின் பெட்டி ஒரு கிலோமீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## சொந்தச் செலவில்

# சிங்கப்பூர் செல்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மருத்துவ பரிசோதனைக்காக சிங்கப்பூர் செல்லவுள்ளார். இந்த பயணத்திற்கான எந்தவொரு செலவுகளையும் அரசாங்கம் செலுத்தக் கூடாது என ஜனாதிபதி உத்தரவிட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் ஜனாதிபதியின் விமானப் பயணச்சீட்டு மட்டுமல்லாது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கான பயணச்சீட்டு, விடுதிக் கட்டணம், மருத்துவமனை கட்டணம் என்பன ஜனாதிபதியின் சொந்தப் பணத்தில் செலுத்தப்படவுள்ளன.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தமது தனிப்பட்ட செலவுகளை தாமே ஏற்க வேண்டும் என்ற கொள்கையை ஊக்குவிப்பதற்காக ஜனாதிபதி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# விரைவில் புதிய இராஜதந்திரிகள் நியமனம்!

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தகவல்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வெற்றிடமாகவுள்ள இராஜதந்திர இடங்களுக்கு புதியவர்கள் அடுத்த சில நாட்களுக்குள் நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய இராஜதந்திர நியமனங்கள் விரைவில் செய்யப்படும் என்று தான் எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார். மேலும், "பல தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பிற இராஜதந்திரிகள் நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டனர், அதில் பெரும்பாலானவர்கள் திரும்பி வந்துள்ளனர்.


வரவிருக்கும் நாட்களில் இந்த வெற்றிடங்களை நிரப்ப ஜனாதிபதி புதிய நியமனங்கள் வழங்குவார் என நான் எதிர்பார்க்கின்றேன்" எனக் கூறியுள்ளார்.



தேர்தல்களின் போது அரசியல் நியமனங்கள் செய்ய தடைவிதிக்கப்பட்டபோதும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தால் சில நியமனங்கள் செய்யப்பட்டன என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

எனவே அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை மட்டுமே தற்போதைய அரசாங்கம் திரும்ப அழைத்தது என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (இ-7)

## இந்தியாவுடனான தோல்விக்கு நானும் ஒரு காரணம் -மலிங்க தெரிவிப்பு



இந்திய அணிக்கெதிரான இருபதுக்கு இருபது தொடரை இழந்தமைக்கு தானும் ஒரு காரணம் என இலங்கை அணியின் தலைவர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொடரை நிறைவு செய்து நாடு திரும்பியுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "நாங்கள் 2:0 என தொடரை முழுமையாக இழந்துள்ளோம். நான் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் ரி-20 கிரிக்கெட்டில் நான் அனுபவம் உள்ள வீரர்.

ஆனால் இந்தத் தொடரில் ஒரு விக்கெட்டைக் கூட நான் கைப்பற்றவில்லை. இதனால் தான் நாங்கள் தொடரை இழந்த சூழ்நிலையில் உள்ளோம்.

ரி-20 போட்டிகளில் இலங்கை அணியில் உள்ள வீரர்களில் அதிக அனுபவம் கொண்டவன் நான். வழக்கமாக விக்கெட்டுகள் கைப்பற்றக்கூடிய பந்து வீச்சாளர் என்பதால் விக்கெட் வீழ்த்த வேண்டும் என்ற நெருக்கடி எனக்கு இருந்தது.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நாங்கள் வெற்றிபெற வேண்டுமானால் முதல் 6 ஓவர்களுக்குள் ஒன்றிரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியாக வேண்டும். அதை நாங்கள் இந்தத் தொடரில் செய்யவில்லை. இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த இணைப்பாட்டத்தினை அமைத்தனர்.


ரி-20 போட்டிகளில் இணைப்பாட்டம் மிகவும் முக்கியமாகும். எங்கள் அணி வீரர்களால் துடுப்பெடுத்தாட முடியும். அதிரடியாக விளையாட முடியும். ஆனால் அவர்கள் ஆட்டத்தைக் கட்டமைப்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இதில்தான் அவர்கள் தேக்கம் அடைகின்றனர்.

கடந்த காலங்களில் குமார் சங்கக்கார, ஜெயவர்தன, டில்ஷான் ஆகியோருக்கு இன்னிங்ஸை எப்படிக் கட்டமைப்பது என்பது தெரிந்திருந்தது. தற்போது அணியில் உள்ள இளம் வீரர்கள் திறன் உள்ளவர்கள் தான். தங்களது ஷொட்களை விளையாட அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் சில நேரங்களில் அமைதியாக இருக்க வேண்டும். நிலைமையைக் கையாள வேண்டும். இந்த பகுதியில் அவர்கள் சுணக்கம் அடைகின்றனர். அனுபவம் வாய்ந்த வீரர்கள் அணியில் இருந்தால் நிலைமையை அவர்கள் கையாள்வார்கள். அணித் தலைவரின் பணி எளிதாக இருக்கும்.

ஆனால் அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. தற்போதுள்ள வீரர்கள் அனுபவம் இல்லாதவர்கள். அவர்களை வழி நடத்துகிறேன். பொறுத்திருந்து பார்ப்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## 2017 க்குப்பின் முதன்முறையாக கிண்ணம் வென்ற செரீனா வில்லியம்ஸ்



அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 2017 அவுஸ்திரேலிய ஓபனில் சம்பியன் பட்டம் வென்ற பிறகு தற்போதுதான் இறுதிப் போட்டியில் வெற்றி வாகை சூடியுள்ளார்.

அமெரிக்காவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ். 2017-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபனை வென்றார். அதன்பின் கர்ப்பிணியாக இருந்ததால் டென்னிஸில் இருந்து விலகியிருந்தார்.


குழந்தை பெற்றபின் தீவிர பயிற்சி மேற்கொண்டு மீண்டும் டென்னிஸில் ஆதிக்கம் செலுத்தினார். ஆனால் முக்கியமான சில தொடர்களில் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

ஆனால் அவரால் கிண்ணத்தை வெல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில்தான் ஆக்லாந்து கிளாசிக் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டியில் ஜெசிகா பெகுலாவை எதிர்கொண்டார். இதில் 6-3, 6-4 என நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் 2017-க்குப்பின் முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இதில் கிடைத்த பரிசுத் தொகையை அவுஸ்திரேலியா காட்டுத்தீ நிவாரணத்திற்கு வழங்கியுள்ளார்.

## டோனிக்கு ஏன் நீண்ட ஓய்வு?-கவாஸ்கர்



இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான எம்எஸ் டோனி நீண்ட நாள் ஓய்வில் இருப்பது ஏன்? என கவாஸ்கர் கேள்வி எழுப்பியுள்ளார்

இந்திய அணிக்கு இரண்டு உலக கோப்பைகளை வென்று பெருமை சேர்த்தவர் எம்எஸ் டோனி. 2007-ம் ஆண்டு 20 ஓவர் உலக கோப்பையும், 2011-ல் ஒரு நாள் போட்டி உலக கோப்பையும் அவரது தலைமையிலான இந்திய அணி கைப்பற்றியது.

3 வடிவிலான அணிக்கும் கேப்டனாக இருந்த டோனி 2014-ம் ஆண்டு இறுதியில் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் கேப்டன் பதவியில் இருந்து விலகிய அவர், அந்த அணிகளில் மட்டும் இடம் பெற்றார்.

இங்கிலாந்தில் கடந்த மே மாதம் முதல் ஜூலை வரை நடந்த உலக கோப்பை போட்டியோடு டோனி ஓய்வு பெறுவார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் ஓய்வு முடிவை அறிவிக்கவில்லை.

அவுஸ்திரேலியாவில் அக்டோபர் - நவம்பர் மாதம் நடைபெறும் 20 ஓவர் உலக கோப்பையில் விளையாட டோனி முடிவு செய்துள்ளார். அதோடு அவர் ஓய்வு பெற திட்டமிட்டுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியின் ஆட்டத்தைப் பொறுத்துதான் அவர் உலக கோப்பை அணியில் இடம் பெறுவாரா? என்பது தெரிய வரும்.

உலக கோப்பை போட்டிக்கு பிறகு டோனி இதுவரை எந்த ஒரு சர்வதேச போட்டியிலும் விளையாடவில்லை. ஒரு நாள் போட்டியில் அவரது எதிர் காலம் கிட்டத்தட்ட முடிந்து விட்டதாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் டோனி நீண்ட காலமாக விளையாடாதது ஏன்? என்று முன்னாள் கேப்டனும், டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர் கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-


20 ஓவர் உலக கோப்பை அணியில் டோனி இடம் பெறுவாரா? என்பது குறித்து அவரிடம்தான் கேட்க வேண்டும். இதற்கு உடல் தகுதி முக்கியம். கடந்த ஜூலை மாதத்துக்கு பிறகு டோனி இந்திய அணியில் இணைந்து ஆடவில்லை. இதுதான் முக்கியமான கேள்வி. யாராவது நீண்ட காலம் இந்திய அணிக்காக ஆடாமல் இருப்பார்களா?

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தைவிட ரஞ்சி போட்டியில் சம்பளம் குறைவாக கிடைக்கிறது. இந்த ஊதிய வேறுபாடு தொடர்பாக கிரிக்கெட் வாரிய தலைவர் கங்குலி கவனம் செலுத்தி பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பெண்கள் ரி20 உலகக்கிண்ணத்திற்கான இந்திய அணியினரின் பெயர்கள் அறிவிப்பு

### அணித்தலைவியாக ஹர்மன்ப்ரீத் கவுர்




அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் தொடங்கும்ரி20 உலக கோப்பை தொடருக்கான இந்திய பெண்கள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கான ரி20 உலக கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 21-ந்தேதி தொடங்கி மார்ச் 8-ந்தேதி வரை நடக்கிறது.

இதில் பங்கேற்கும் இந்திய பெண்கள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணியில் இடம் பிடித்துள்ள வீராங்கனைகள் விவரம்:-

1. ஹர்மன்ப்ரீத் கவர், 2. ஸ்மிரிதி மந்தனா, 3. ஷபாலி வர்மா, 4. ஜெமிமா ரோட்ரிக்ஸ், 5. ஹர்லீன், 6. வேதா, 7. டேனியா பாட்டியா (விக்கெட் கீப்பர்), 8. தீப்தி ஷர்மா, 9. ஷிகா பாண்டே, 10. வி. வஸ்திராகர், 11. பூனம் யாதவ், 12. ராதா யாதவ், 13. அருந்ததி ரெட்டி, 14. ராஜேஷ்வரி கேக்வாட், 15. ரிச்சா கோஷ்.



# ஐ.தே.கவால் பலமான எதிர்க்கட்சியாக செயற்பட முடியாது

# மாற்றுத் தீர்வாக ஜே.வி.பியை பலப்படுத்துகின்றோம்

## பிமல் ரத்நாயக்க அழுத்தம் திருத்தம்

**(கொழும்பு)**

**ஐ.தே.க. 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலமான அரசாங்கமொன்றை அமைத்து ஆட்சி செய்ய முடியாமல் போனது. அதே போன்று அவர்களால் பலமான எதிர்க்கட்சியாகவும் செயற்பட முடியாது. எனவே அதற்கு மாற்று வழியாக மக்கள் விடுதலை முன்னணியை பலப்படுத்த வேண்டியது அவசிய மாகும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

அத்தோடு பொதுத் தேர்தலிலும் சிவில் அமைப்புக்களுடனும் தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயற்படும் நோக்கம் மாத்திரமே இருப்பதாகவும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்கவோ அலலது வேறு கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கான நோக்கமோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கு ஜே.வி.பியின் ஆயத்தங்கள் குறித்தும், பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற செயற்பாடுகள் குறித்தும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1997ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐ.தே.கவிற்கு பலமான அரசாங்க மொன்றை அமைத்து ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. அதேபோன்று அவர்களால் பலமான எதிர்க் கட்சியாக செயற்படவும் முடியாது. எனவே பலமானதொரு எதிர்க் கட்சியை உருவாக்குவதற்கான கடமையும் பொறுப்பும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இருக்கிறது.

கிராம மட்டத்திலிருந்து பொதுத் தேர்தலில் களமிறங்குவதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம்.



பாராளுமன்ற தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் அதே சின்னத்திலேயே போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

இதுவரையில் சுமார் 30க்கும் மேற்பட்ட கிராம மட்டத்திலான மக்கள் சந்திப்புக்கள்.இடம் பெற்றுள்ளன.

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியிலும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ரீதியிலும் பெருமளவிலான உறுப்பினர்களை களமிறக்கி வெற்றி பெறும் நோக்கத்திலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி என்ற சிவில் அமைப்புக்களுடனான பரந்துபட்ட கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணி பிரதான கட்சியாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது எம்முடன் கைகோர்த்த அனைத்து சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்தே பொதுத் தேர்தலிலும் களமிறங்கவுள்ள நிலையில், மாறாக எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து கூட்டணி அமைப்பதற்கோ அல் லது ஆதரவு வழங்குவதற்கோ நாம் தயாராக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



உ
ஓம் நமசிவாய
ஸ்ரீநாக கன்னியம்மன் துணை



**சித்தன்கேணி**
**அருள்மிகு நாககன்னி அம்பாள்**
**தைப்பொங்கல் தீ மிதிப்பு**
**15.01.2020 புதன்கிழமை 12 மணி**

**அருளாசியுரை**
சின்மயா மிசன் சுவாமி
சிதாகாசானந்த சரஸ்வதி சுவாமி

**வாழ்த்துரை**
சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்

**சைவச் சொற்பொழிவு**
சைவ சித்தாந்த கலாநிதி வர்ணனைக் கலாநிதி
சைவப்புலவர் செ.கந்த.சத்தியதாசன் (J.P)
சைவசின்மயர் க.நித்திய பாபுதரன்

**நாதஸ்வரச்சக்கரவர்த்தி**
S.பாலமுருகன் குழுவினர்

**தவில் வித்துவான்**
கண்ணன் குழுவினர், சித்தன்கேணி

**கிரியைகளை சிறப்புற நடத்துபவர்**
சாமஸ்ரீ தேசமான்ய சேவைநெறிச் செம்மல், சமூகஜோதி ஆன்மீகச் செம்மல்
சித்த ஞானகுரு இந்திரன் ஐயா
உதவிக்கு தேவி உபாசகர் செ.ஸ்ரீசுதாகர்.

(c-8974)

கீரிமலை வீதி, சித்தன்கேணி.
சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும் ஆலயத் தொண்டர்களும்

# முன்பள்ளிக்கு புதிய கட்டடம்





(குப்பிழான்)

ஏழாலை கிழக்குப் புனித இசிதோர் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

புனித இசிதோர் ஆலயப் பங்குத் தந்தை பேணாட் றெக்னோ தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் ஏனைய விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் மற்றும் திருமதி- நந்தினி சிவஞானம் ஆகியோர் இணைந்து புதிய முன்பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

குறித்த முன்பள்ளிக்கெனத் தனியானதொரு கட்டடம் இல் லாமையால் கடந்த 44 வருட ங்களுக்கு மேலாக ஏழாலை கிழக்குப் புனித இசிதோர் பங்கு மண்டபத்தில் பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வந்தது.

இந்நிலையில் ஏழாலையிலிருந்து புலம்பெயர்ந்து தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் கலாநிதி கன கரட்ணம் உமாகாந்தன் முன்பள்ளிக்கான மூன்று பரப்புக் காணியைக் கொள்வனவு செய்வதற்கு நிதிப்பங்களிப்பை வழங்கியிருந்தார்.

குறித்த காணியில் புதியமுன்பள்ளிஅமைவதற்குத நாடாளுமன்ற உறுப்பி னர் சித்தார்த்தன் தன்து பன்முகப் படுத் தப்பட்ட நிதியிலிருந்து 12 இலட்சம் ரூபாவையும் ஏழாலை இசிதோர் ஆலயப். பங்கு மக்கள் 2 இலட்சம் ரூபா நிதியையும், மேற்படி மூன் பள்ளியின் பழைய மாணவர்கள் ஒரு இலட்சம் ரூபாவையும் வழங்கியிருந்ததுடன் மூன்று இலட்சம் ரூபா அரச நிதியையும் சேர்த்து 18 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப் பில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (இ-18)

**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்**
**பதவி வெற்றிடங்கள்**

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தாதியர் உத்தியோகத்தர்
2. தாதி பயிற்சியாளர்
3. மருந்தாளர்
4. மருந்தக பயிற்சியாளர்
5. பயிற்சி வரவேற்பாளர்
6. சமையலாளர்

ஆர்வமுள்ளவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 19.01.2020 அன்று 9.00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமூகம் தரவும்.
அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(c-8976)

**தலைவர்,**
**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து), மூளாய்.**
**தொலைபேசி இல:- 021 225 0441**
**(9.00A.M-4.30P.M)**

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## குறியீடுகள் - ஓர் அறிமுகம்

குறியீடுகளை அல்லது சின்னங்களை மூளைக்கு சில கட்டளைகளை பிறப்பிக்கும் விதத்தில் உருவகப்படுத்தி பன்னெடுங்காலமாக மனிதர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

குறியீடுகள் மனிதர்களுக்கு வழி காட்டி பலகைகள் போல் பயன்பட்டு வருகின்றன. மனிதன் தன் கற்பனையில் தோன்றும் உருவங்களையே பொருட்களாக படைத்து அவைகளை தனக்கு பயனுள்ளவைகளாக மாற்றி பயன்படுத்தி வந்துள்ளான்.

மனிதனின் படைப்புக்கள் அனைத்தும் முதலில் அவன் கற்பனையில் தோன்றியவையே. பறவைகளை கண்ட மனிதன் தானும் பறவைகளைப் போல் பறந்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பார்த்தான். அதன் விளைவாகவே விமானம் உருவானது.

கண்களால் பார்க்கப்படும் காட்சி பதிவுகளை எப்படி அனுபவிப்பது என்பதை தன் கற்கனையில் கண்டுகளித்து பிறகு அதை நடைமுறைக்கு கொண்டு வருவது என்பது மனித மூளையின் இயல்பாக உள்ளது.

மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐந்தும் புலனுறுப்புகளாகும். இவைகளில் கண்கள் மட்டும் சக்திவாய்ந்த புலனுறுப்பாகும். காணும் காட்சிகளை விரைவாக படமெடுத்து மூளைக்கு அனுப்பி அதன் மூலம் மனதில் சலனத்தை ஏற்படுத்துவதிலும் மனதில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதிலும் கண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கண்கள் காணும் காட்சிகள் (ஒளி வடிவம்) அனைத்தும் வலது மூளையிலும் காதில் கேட்கும் செய்திகள் (ஒலி வடிவம்) அன்னைத்தும் இடது மூளையிலும் பதிவாகின்றன.

ஒருங்கிணைத்தல், எச்சரிக்கை உணர்வு, எழுத்தாற்றல், வழக்கத்திற்கு மாறான செயல்களை செய்தல், உள்ளுணர்வு, நிலையான நினைவாற்றல், படைப்பாற்றல், கற்பனை கோர்வையாக இல்லாமல் தனித்தனியாக இருப்பவைகளை கோர்த்த பொதுநிலைப் படுத்தல் போன்றவை வலது மூளையின் செயல்களாகும்.

தர்க்கம் செய்தல், பகுத்தறிதல், கணக்கிடுதல், தற்காலிக நினைவாற்றல், பேச்சாற்றல், வழக்கமான செயல்களை செய்தல் போன்றவை இடது மூளையின் செயல்களாகும்.

(தொடரும்...)

# மக்களின் ஆலோசனைகளைப் பெற்று மதிப்பீடு தயாரிப்பதற்கு இணக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளின் போது பொதுமக்கள் மற்றும் வட்டார உறுப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று மதிப்பீடு தயாரிப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபை இணக்கம் தெரிவித்தது.

சாவகச்சேரி பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற அமர் வின் போதே பிரதேச சபையினர் இத் தீர்மானத்தை எடுத்தனர். கடந்த காலங்களில் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு இருந்த வேலைப்பளு மற்றும் கால அவகாசம் இல்லாமை போன்ற காரணங்களால் வீதிப் புனரமைப்பு மதிப்பீடுகளை அவசரமாக தயாரிக்க வேண்டிய நிலை காணப்பட்டதாகவும், இத னால் வீதிப்புனரமைப்பின் பின் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலை போன்ற சில அசௌகரியங்கள் காணப்படுவதாகவும் உறுப்பினர்கள் சபையில் சுட்டிக் காட்டினர்.

உறுப்பினர்களின் கருத்தையடுத்து எதிர்வரும் காலங்களில் இவ்வாறான அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பொது மக்கள் மற்றும் வட்டார உறுப்பினர் ஆகியோரது ஆலோசனைகளைக் கேட்டு அதற்கேற்ப மதிப்பீட்டினைத் தயாரிக்க தீர்மானிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கம்பெரலியத் திட்டம் ஊடான அபிவிருத்தித் திட்டங்களுக்கான மதிப்பீடு தயாரிப்பின் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் விமர்சனங்களுக்கும் ஆளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# விசமிகள் தீ வைப்பு
# அழகுசாதனப் பொருட்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பகுதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்று விஷமிகள் சிலரால் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

பருத்தித்துறை புதிய சந்தை கட்டடத்தில் இருக்கும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது. அதிகாலை வேளை அப்பகுதிக்கு வந்த சிலர் பெற்றோல் ஊற்றி தீ வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகின. இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60-101)



கம்பர்மலை பாரதி சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு சிறுவர் பூங்காவை திறந்து வைத்தார். வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (படங்கள்:- மகாலிங்கம்)

## இராசி பலன்

**மீனம்** உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்** பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | இராசி பலன் | | சந் |
| புத | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம்,<br>அவிட்டம் | | |
| சூரி, சனி, குரு, கேது | செவ் | | |

13.01.2020
மார்கழி 28, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.39 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 12.44 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
தன்னை ஆளத் தெரியாதவன்
பிறரை ஆள முடியாது.
வளவன்

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது விழிப் புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக புல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தன்னம்பிக்கையோடு பணி புரிவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், உதாசினப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** வெளியூர் போக்குவரத்துக்களால் அலைச்சல் காணப்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கும், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும்.

# மோ.சைக்கிள் மீது விழுந்த மரம்! மயிரிழையில் தப்பிய நபர்





(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி, யாழ்.மாநகர சபைக்கு அண்மையில் நேற்றுக் காலை 6 மணியளவில் மரம் ஒன்று விழுந்ததில் அவ் வீதியூடாக போக்குவரத்துத் தடைப்பட்டது. குறித்த மரம் மோட்டார் சைக்கிள் மீது விழுந்தது. இருப்பினும் அதனைச் செலுத்தி வந்தவர் தெய்வாதீனமான உயிர் தப்பினார். (இ-7)

# முன்னாள்-இந்நாள் இராணுவத்தினர் சந்திப்பு





(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை சந்திக்கும் நிகழ்வு யாழில் இடம்பெற்றது.

யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் எண்ணக்கருவிற்கு அமைய இராணுவத்தில் 22 வருடங்கள் சிறந்த சேவையாற்றி ஓய்வு பெற்ற யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் களுடனான சந்திப்பானது தல் செவன விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இச் சந்திப்பில் யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய, 55 மற்றும் 51 ஆவது படைகளின் கட்டளைத் தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள், ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் கலந்து சிறப்பித்தனர். (இ-9)


# மறவன்புலவுக் காற்றாலைத் திட்டத்தில் ஒரு கோபுரத்தை மாற்ற நிறுவனம் ஒப்புதல் கடிதம்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலவுக் காற்றாலைத் திட்டத்தில் மக்களின் கோரிக்கைக்கு அமைய இரு கோபுரங்களில் ஒரு கோபுரத்தை மாற்றுவதற்கு காற்றாலை ஒப்பந்த நிறுவனமான சிலெக்ஸ் மறவன்புலவு சிறப்புப் பிரதிநிதிகள் குழுவிற்கு கடந்த 9 ஆம் திகதி ஒப்புதல் கடிதம் அனுப்பியது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து குறித்த ஒப்புதல் கடிதம் அனுப்பப்பட்டது. (இ-10)

# பெரியகடை சந்தை வியாபாரிகளுடன் முன்னணி உறுப்பினர்கள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியகடை சந்தை வியாபாரிகளின் அழைப்பை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தனர். இந்நிலையில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பேச வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

இச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் வரதராஜன் பார்த்தீபன், சிவகந்தன் தனூஜன், மகேந்திரன் மயூரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-10)

# அதிரடிப்படை அதிகாரி மீது தாக்குதல்

## நான்கு பேர் கைது

(கொழும்பு)


பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் செயற்பாட்டுக்கு இடையூறு விளைவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லாதுகல வனப்பகுதியில் வெட்டப்பட்டிருந்த மரக்குற்றிகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ட்ரக்டரில் ஏற்றிச் சென்ற போது, ஆட்டோவில் வந்த சிலர், ட்ரக்டரை வழிமறித்துள்ளனர்.

அத்துடன், அதிரடிப் படையினரின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் அதிரடிப் படை அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அம்பாறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ)

# எரிபொருள் விலை அதிகரிக்காது

## அமைச்சர் அமரவீர உறுதி



(அம்பலாந்தொட்ட)

மத்திய கிழக்கு நாடுகளில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும் இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட மாட்டாது எனவும், உள்நாட்டில் போதிய ளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பலாந்தொட்ட பகுதியிலுள்ள இ.போ.ச. சாலைக்கு நேற்றுக்காலை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் அங்கு ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த பதற்ற நிலைமை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று பரவிய வதந்தி காரணமாக நாட்டில் மக்கள் பதற்றமடைந்துள்ளனர். இருப்பினும், போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. இதனால், மக்கள் பதற்றமடைய வேண்டிய ஒரு நிலைமை ஏற்படாது எனவும் எரிபொருள் விலை அதிகரிப்புக்களும் இடம்பெறாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பாராட்டி

வாழ்த்துகின்றோம்

"கலைஎழில்" திரு.செல்வலிங்கம் மயில்வாசன்

(அகில இலங்கை சமாதான நீதவான் )



யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்தவரும் துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றுபவரும் சமூக சேவை ஆர்வலரும் சிறந்த கலைஞரும் அறிவிப்பாளனும் எமது நண்பனுமாகிய "கலைஎழில் " திரு.செல்வலிங்கம் மயில்வாசன் அவர்கள் கடந்த 08.02.2020 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதவான் திரு.செல்வநாயகம் -லெனின்குமார் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனை முன்னிட்டு,

இவரை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(7591)

வாழ்த்துவோர் :- நண்பர்கள், மல்லாவி.

# வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



(பிலியந்தலை)

**வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய எந்த அவசியமும் இல்லை என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**


வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில் நாட்டைப் பாதுகாக்க அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி தயாராகவே இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

பிலியந்தலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் கூறியது போல் அரசாங்கத்தினர் அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையை இரத்துச் செய்தால், அதற்கும் எதிர்க்கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சனைப் பார்த்து நாய்களை போல் குரைப்பது கவலைக்குரிய நிலைமை

## கலாநிதி கருணாரட்ன காட்டம்





(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்கள் ஊடாக பகிரங்கமாகி இருக்கும் குற்றச்செயல்களை எப்படி வெளிக்கொண்டு வந்தார் என்பதை ஆராயாமல், அந்த குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்க பல வழிமுறைகளை கையாண்டு ஊழல், மோசடிகளை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

இவற்றை வெளிக்கொண்டு வந்தமைக்காக அவரை விமர்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

நாடாளுமன்றத்தில், நீதித்துறையில் எந்த இடமாக இருக்கலாம், வேறு அமைப்புகளாக இருக்கலாம் நாட்டில் நடக்கும் முறைகேடுகளை மிகத் தெளிவாக நாட்டுக்கு வெளிக்கொண்டு வந்துள்ளார்.

முறைகேடுகள் நடந்த இடங்களை தேடிப்பார்த்து, மிகவும் சூட்சுமமான முறையில் மக்களுக்கு வெளிக்கொண்டு வர ரஞ்சன் ராமநாயக்கவினால் முடிந்துள்ளது.

தவறுகளை வெளிக்கொண்டு வர கையாண்ட விதம் பற்றி தேடிப் பார்ப்பதை விட தவறுகளை சுட்டிக்காட்டிய பின் அதனை சரி செய்வது எப்படி என்பதை தேடிப்பார்க்க வேண்டியதே முக்கியமானது.

உண்மைகளை வெளிக்கொண்டு வந்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்கவை பார்த்து நாய்களை போல் குரைப்பது கவலைக்குரிய நிலைமை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓவியங்களுக்கு கழிவு ஒயில்




(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தைப் பகுதியில் வரையப்பட்டிருந்த பாரம்பரிய கலைகலாசாரங்களை பிரதிபலிக்கும் ஓவியங்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை கழிவு ஒயில் பூசப்பட்டுள்ளது. (இ-114)

# யாழில் 50 குடும்பங்களுக்கு தைப்பொங்கல் பொதி







(குப்பிழான்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவியும், நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான திருமதி- வாசுகி சுதாகரனின் சொந்த நிதிப்பங்களிப்பில் 50 குடும்பங்களுக்குத் தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (இ-18)

# ரஞ்சன்-எவ்.சி.ஐ.டி இயக்குநர் உரையாடலும் கசிந்தது!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கும், பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவின் முன்னாள் இயக்குநர், சிரேஷ்ட டி.ஐ.ஜி.ரவி வைத்தியலங்கரவிற்குமிடையிலான தொலைபேசி உரையாடல் கசிந்தது.

புதிய சிங்கள அமைப்பு இந்த உரையாடலை நேற்று வெளியிட்டது.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரை விளக்கமறியலில் வைத்தமை குறித்து அதில் பேசப்பட்டது. எனினும், அதில் அழுத்தம் கொடுக்கும் விதமாகவோ அல்லது வேறு அதிகார மீறலாகவோ அந்த உரையாடல் அமையவில்லை.

இதேவேளை, ஜோன்ஸ் டன் பெர்னாண்டோ மீதான பி அறிக்கையை பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவிலிருந்து ரஞ்சன் கோரியுள்ளார். இருப்பினும் அதை வழங் குவது சட்டமீறல் என ரவி வைத்தியலங்கார மறுத்த போது, அதை உத்தியோகபூர்வமாக அல்லாமல், இரகசியமாக தருமாறு ரஞ்சன் கோரியுள்ளார். அரை மணித்தியாலத்தின் பின்னர் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரி கூறுவதுடன் அந்த உரையாடல் முடிந்தது. (இ-7)

## “பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க.படுதோல்வியடையும்”

# அரசியலமைப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண

# கோட்டா அரசிற்கு பெரும்பான்மை வேண்டும்

### சு.க.பேச்சாளர் வீரகுமார வலியுறுத்து

(அநுராதபுரம்)

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்களில் காணப்படும் பிரச்சினைகளை சரி செய்வதற்கு கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்திற்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



அநுராதபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொடர்ந்தும் எமது பலத்தை விமர்சிக்க வாய்ப்பில்லை.மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது எமது பொறுப்பு. அதைப் பெற எமக்கு முடிந்தமையால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றோம்.

ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடையும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஆயிரம் தேசிய பாடசாலைத் திட்டத்தின் கீழ்

# மாவட்ட மட்டத்தில் 20 மும்மொழி பாடசாலைகள்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளை ஆயிரமாக அதிகரிக்கும் நோக்கில் மாவட்ட ரீதியில் இருபது மும்மொழி இடைநிலைத் தேசியப் பாடசாலைகளை அமைக்கும் திட்ட சுற்றுநிருபம் கல்வி அமைச்சால் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளுக்கும் சம நியாய கல்விப் பிரவேச வாய்ப்பை வழங்கும் நோக்கோடு “சௌபாக்கியத்தின் எதிர்கால நோக்கு” எனும் தொனிப் பொருளின் கீழ் குறித்த திட்டம் செயற்படுத்தப்படும்.

“நவோதய” செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு நவீன கல்வி மறுசீரமைப்பின் கீழ் பாடசாலைகளின் அமைப்பைத் திறனாய்வு செய்யும் நிகழ்ச்சி முதன்மையாக உள்ளடக்கப்படும்.

மும்மொழித் தேசியப் பாடசாலைகள் வேலைத்திட்டத்தில் பாடசாலைகளின் நியாய நிலையிறுத்த மற்றும் பாடசாலைகளின் விவரணையாக்கப் பிரயோகங்கள் மூலம் படிமுறைச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படும்.

பாடசாலைகளின் வலையமைப்பை இனம் காணல், அபிவிருத்திக்காக பாடசாலைகளின் வலையமைப்பினை தேர்ந்தெடுத்தலும் உறுதிசெய்தலும் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன குறித்த திட்டத்தின் படிமுறைச் செயற்பாடுகளாகும். மேலும் மாணவர் நல்வு. உட்கட்டமைப்பு வசதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கேந்திரப் பாடசாலைகளுக்காக வினைத்திறன் மிக்க செலவு மற்றும் வள முகாமைத்துவ மையங்களை அமுல்படுத்தல் போன்ற பல விடயங்கள் குறித்த சுற்றுநிருபம் மூலம் வெளியிடப்பட்டது. (இ-10)

# நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் பின் ரஞ்சன் கட்சியை விட்டு நீக்கப்படுவார்!

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஐ.தே.கவின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் பின்னர், ரஞ்சன் ராமநாயக்க கட்சியை விட்டு நிச்சயம் வெளியேற்றப்படுவார் என முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் செயற்பாட்டால் கட்சிக்குள்ளும், நாட்டிலும் பெரும் அரசியல் பிரச்சினைகள் உருவாக்கியுள்ளதாகவும் விசனம் வெளியிட்டார்.

“அவர் இனி கட்சியில் இருக்க மாட்டார். கட்சிக் குழு எதிர்வரும் புதன்கிழமை ஒரு உறுதியான முடிவை எடுக்கும்.

கட்சி ஏற்கனவே கடுமையான முடிவை எடுத்துள்ளது. அவர் நிச்சயம் வெளியேற்றப்படுவார்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பாக சீனா மீண்டும் உறுதியளிக்கும்!

(கொழும்பு)

கோட்டா - மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கம் அம்பாந்தோட்ட துறைமுகம் குறித்து மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்தாலும் சீனா இந்த ஒப்பந்தம் குறித்து மீண்டும் தனது உறுதிப்பாட்டை தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் அடுத்த வாரம் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வரும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் மாற்றப்படாது என்றும் பிற சீன முதலீட்டு அபிவிருத்திப்பணிகள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்குவர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பை தளமாகக் கொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தாலும், அரசாங்கத்தில் உள்ள மற்றவர்கள் மாற்றியமைக்கப்படும் எனக் கூறியுள்ளனர்.

ஆகவே சில நாடுகளின் அழுத்தம் இருந்தபோதிலும் இலங்கையில் உள்ள அனைத்து சீன அபிவிருத்தித் திட்டங்களும் முன்னோக்கி கொண்டுசெல்லப்படும் என்று வாங் ஜி அவரது விஜயத்தின் போது உறுதியளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று 13 ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு இலங்கை வரும் சீன வெளிவிவகார அமைச்சர், நாளை 14 ஆம் திகதி மதியம் 12.15 மணிக்கு நாட்டைவிட்டு வெளியேறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்த குறுகிய நேரப் பயணத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்துரையாட திட்டமிட்டுள்ளார்.

அத்தோடு மரியாதை நிமித்தமாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவையும் சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# திருமண வீட்டில் குடும்பங்களை பிரிப்பது குறித்து பேசிய ரணில்



(கொழும்பு)

திருமண பந்தங்கள் என்பது புதிய பந்தங்களை மற்றும் உறவுகளை இணைக்கச் செய்யப்படும் நிகழ்வுகளில் ஒன்றாகும்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க திருமண நிகழ்வில் கலந்துகொண்டு குடும்பங்களை உடைப்பது குறித்துப் பேசியுள்ளார் என ஆங்கில ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிமின் மகளின் திருமண நிகழ்வின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவரது இந்த உரையாடலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கேட்டுக் கொண்டிருந்தனர் என்றும் சுட்டிக்காட்டியது.

உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்களை அம்பலப்படுத்தியதன் மூலம் ஏற்பட்டுள்ள சர்ச்சையை குறிப்பிட்டு ரணில் விக்கிரமசிங்க, இந்த விவகாரம் ஏதேனும் வெகுதூரம் சென்றால், குடும்பப் பிரச்சினைகள் ஏற்படக் கூடும். குடும்பங்கள் பிரிந்து போகக்கூடும் என்று கூறியுள்ளார்.

எனவே இந்த அரசாங்கம் பின்னர் குடும்பப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும் எனத் தெரிவித்தார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# பிரதேச சபையின் அனுமதியின்றி இயங்கும் இராணுவத்தின் விடுதியில் ஒன்றுகூடல் செய்த புதுக்குடியிருப்பு பிரதேசசபை!





(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அனுமதி இன்றி இராணுவத்தால் நடத்தப்படும் விருந்தினர் விடுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

செம்மலை அளம்பில் பகுதியில் அமைந்துள்ள 24 ஆவது சிங்க றெஜிமெண்ட் படைப் பிரிவால் நடத்தப்படும் "கிறீன் ஜாக்கெட்" எனும் விருந்தினர் விடுதி கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகைக்குள் வருகின்றது.

குறித்த விருந்தினர் விடுதி பிரதேச சபையின் அனுமதிகள் எதுவும் பெறப்படாமல் இயங்குவதோடு பிரதேச சபைகளுக்குரிய வரிகளும் செலுத்துவதில்லை. கடற்கரை பகுதியில் மீனவவர்கள் கடற்றொழில் செய்யும் பகுதியை அபகரித்து இந்த விடுதி இயங்கி வருகின்றது. தென்பகுதி சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்து இயங்கும் இந்த விடுதியால் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குரிய சுற்றுலா சார்ந்த வருமானங்கள் கிடைப்பது குறைவடைகின்றது.

இது போன்று பல உணவகங்கள், விடுதிகள், கடைகள் போன்றன இராணுவத்தால் உள்ளூராட்சி திணைக்களங்களின் அனுமதிகள் இன்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்திச் செல்லப்படுகின்றது. இதனால் உரிய அனுமதிகளுடன் பல இலட்சக்கணக்கில் முதலீடுகளை செய்து மேற்படி தொழில்களை செய்துவரும் முல்லைத்தீவு மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான மக்களின் வாழ்வாதாரத்தை ஈட்டித்தரும் தொழில்களை இராணுவம் செய்வது தொடர்பில் அபிவிருத்திக்குழு கூட்டங்களிலும் பிரதேச சபைகளின் அமர்வுகளிலும் விவாதிக்கும் அரசியல்வாதிகள் அதே இராணுவத்தால் நடத்தப்படும் உணவகத்தில் பல ஆயிரம் ரூபாய்களை செலவுசெய்து வருடாந்த ஒன்றுகூடலை செய்தது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

போரால் முற்றாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்கள் இதே பிரதேச சபைகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சிறுக சிறுக தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி இவ்வாறான சுற்றுலா சார்ந்த துறைகளில் முதலீடுகளை செய்து போதியளவு சுற்றுலாப் பயணிகளின் வருகையின்றி, போதிய வருமானம் இன்றி தொழில்களை நடத்திச் செல்லும் வேளையில் அந்த மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் அதே இராணுவத்தினரின் விருந்தினர் விடுதியில் பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், ஊழியர்கள் உட்பட வருட ஒன்று கூடலை செய்வது சரியா? எனவும் பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (9)

## "ஏர்முனை" சஞ்சிகை வெளியீடு



(நெளுக்குளம்)

இயற்கை விவசாயத்துடன் தொடர்புடைய ஏர்முனை சஞ்சிகை வெளியீட்டு விழா நிகழ்வு வவுனியா வெளிக்குளம் பாடசாலை மண்டபத்தில் அமுதம் சேதன விவசாய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பா. நேசராஜா தலைமையில் இடம் பெற்றது.

இயற்கைவழி இயக்கம், நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தின் வெளியீடாக புதிய வெளிச்சம் அனுசரணையுடன் குறித்த சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலினை நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தலைவர் பூபாலசிங்கம், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் பத்மநாதன் ஆகியோர் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை மாணவன் ஒருவன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் விசேடமாக இயற்கைவழி விவசாயம் அல்லது சேதன விவசாயத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் இனி வரும் காலங்களில் அதனை முன்னெடுக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.நிகழ்வில் இயற்கை வழி இயக்கத்தை சார்ந்த பா.கிருசன், வைத்தியர் பவான், விவசாய போதனாசிரியர்களான சூ.சிவதாஸ், கிரிசாந் மற்றும் இயற்கை வழி விவசாய உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். (9-299)

## நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் 'தமிழர் திருநாள்' பொங்கல் உற்சவம்

(முல்லைத்தீவு)

சிங்களமயமாக்கலின் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு "தமிழர் திருநாள்" பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர் .

வருடம்தோறும் தைப்பொங்கல் தினத்துக்கு முதல் நாள் தமிழர் திருவிழா பொங்கல் நிகழ்வுகள் நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் நிலையில் இவ்வருடமும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 8.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. எனவே அனைத்து மக்களையும் இந்த பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (9)

## மன். எழுத்தூர் கொள்ளைச் சம்பவம் மூவர் கைது-ஒரு தொகுதி நகை மீட்பு

(மன்னார் )

மன்னார் எழுத்தூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். கிருஸ்சாந்தன் தெரிவித்தார்.

மன்னார் எழுத்தூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தம்பதியினரை கட்டி வைத்து விட்டு சுமார் 25 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

அதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை ஈடுவைக்கச் சென்ற போது குறித்த மூன்று நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் கொள்ளைச் சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்டவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வருகின்றது எனவும் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் "தாலிக் கொடி" உட்பட ஒரு பகுதி நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-285)

## சிறுமி மீது வன்புணர்வு! இளைஞனுக்கு பொலிஸார் வலைவீச்சு

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயது சிறுமி ஒருவரை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் தேடிவருவதுடன், உதவிய குற்றச்சாட்டில் உறவினரான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தை பெரிய புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி ஒருவரை அவரின் உறவினர் ஒருவரின் துணையுடன் இளைஞர் ஒருவர் வன்புணர்வு மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமியின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானித்த பெற்றோர் சிறுமியை விசாரித்த போது தனக்கு நடந்த சம்பவங்களை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பெற்றோரால் ஓமந்தை பொலிஸில் நேற்று முன்தினம் மாலை செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வன்புணர்வுக்கு உதவிய குற்றச்சாட்டில் உறவினரான 24 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பிரதான சந்தேக நபரான 29 வயது இளைஞனை பொலிஸார் தேடி வருகின்றனர். (9-250)

## மன்.-யாழ்.பிரதான வீதியில் விபத்து - ஒருவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி, மூன்றாம் பிட்டி பாலியாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி, மூன்றாம் பிட்டி பாலியாற்றுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் வெள்ளாங்குளம் பகுதியில் இருந்து இலுப்பைக் கடவை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் பாலியாற்றைச் சேர்ந்த உழவு இயந்திர சாரதி காயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு ,வருகின்றனர். (9-285-286)



மாவீரர் குடும்பங்களிற்கான மாதாந்த உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் விமலகாந்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படம்-முறிகண்டி செய்தியாளர்)




## வவு.தாண்டிக்குளத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையினால் மக்கள் அச்சம்

(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளத்தில் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் பொதுமக்கள் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தாண்டிக்குளம் புகையிரதக் கடவையில் பொருத்தப்பட்டுள்ள ஒளிச் சமிக்ஞை சில சமயங்களில் புகையிரதம் அருகில் வந்ததுடன் ஒளிர்வதுடன் சில சமயங்களில் இயங்காமல் விடுவதினாலும் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்யும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

குறித்த ஒளிச்சமிக்ஞை கடந்த வெள்ளிக்கிழமை மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்தபடி இருந்துள்ளது . புகையிரம் கடவைக்கு மிக அருகில் வந்தவுடன் சிவப்பு நிறத்திலான ஒளி ஒளிர்ந்துள்ளது. இதனால் இப் புகையிரதக் கடவையூடாக செல்லும் பொது மக்கள் புகையிரதம் வருகின்றதா? என வீதியில் நின்று பார்த்து விட்டு செல்ல வேண்டிய அசௌகரியத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

இதேவேளை குறித்த கடவையில் கடந்த வருடம் புகையிரத விபத்து ஏற்பட்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்திருந்ததுடன் பல விபத்துக்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# வவுனியா பூங்காவுக்கு சிவப்பு எச்சரிக்கை

## கண்டுகொள்ளாத நகர சபை

(குருமன்காடு)

வவுனியாவில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் வந்து செல்லும் நகரசபை பூங்கா மற்றும் நகர சபை வளாகம் என்பவற்றிற்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள நகரசபை வளாகம் மற்றும் தினமும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் வந்து செல்லும் நகரசபை பூங்கா என்பவற்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் நகரசபை பூங்கா மற்றும் நகரசபை வளாகம் ஆகிய இரண்டிற்கும் சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

குறித்த சிவப்பு எச்சரிக்கையில், இங்கு டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. இது உங்களுக்கும் அயலவர்களுக்கும் ஆபத்தானது. எனவே உங்கள் வளாகத்தில் உள்ள அனைத்து நுளம்பு பெருகும் இடங்களையும் அகற்றி நுளம்பு பெருகும் இடங்கள் இல்லை என்பதனை மூன்று நாட்களுக்குள் உறுதிப்படுத்துமாறும் இவ் அறிவித்தலை அலட்சியம் செய்யும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெரியோர்கள் வருகை தரும் நகரசபை பூங்காவில் டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது.

டெங்கு பரவும் இடங்களை அகற்றி அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய நகரசபையிலேயே டெங்கு அபாயம் உள்ள நிலையில் எவ்வாறு நகரத்தில் கட்டுப்படுத்த முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (9-250)

# இரணைமடு குளத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு

## 100 பானைகளில் பொங்கல்

(கிளிநொச்சி)

இரணைமடு நீரத்தேக்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் பொங்கல் நிகழ்வும், நூல் வெளியீடும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் முதன்மையான குளமாகிய இக் குளம் 1921 ஆம் ஆண்டு கட்டப்பட்டு நீர்தேக்கி 1000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சுமார் 23 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

20800 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர் செய்கையும், 1200 ஏக்கர் நிலப்பரப்பில் உப பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

இக் குளத்தினை நம்பி 9 ஆயிரம் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தினை கொண்டு செல்கின்றனர்.

அந்தவகையில் குறித்த குளத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 100 பானைகளில் பொங்கல் நிகழ்வும் குளத்தின் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றும் குறித்த நிகழ்வில் வெளியிடப்படவுள்ளது. (9)

# வீதி புனரமைப்பு

(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் புலோப் பளை கிழக்கு அந்தோனியார் கோயில் பின் வீதி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் மணல் வீதியாக காணப்பட்ட குறித்த வீதியை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக பிரதேச மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந் தது.

அந்த வகையில் பிரதேச சபையினுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் குறித்த வீதியினை மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் செய்யும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறித்த பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுரேன், உபதவிசாளர் கஜன் மற்றும் உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர். (9-350)




# யூபிலி நடைபவனி






(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் நடைபவனியானது நேற்று முன்தி னம் சனிக்கிழமை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகியது. மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியூடாக சென்று எழுத்தூர் வீதியை சென்றடைந்தது. பின் பிரதான வீதியூடாக சென்று மன்னார் பிரதான பாலத்தடியை சென்றடைந்து பின்னர் பாடசா லையை சென்றடைந்தது. குறித்த நடைபவனியில் மன்-புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என சுமார் 2500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (9-285)

# சுவாமி விவேகானந்தரின் பிறந்ததின நிகழ்வு








(நெளுக்குளம்)

சைவசமயத்திற்கு அரும்பணியாற்றிய சுவாமி விவேகானந்தரின் 157ஆவது பிறந்ததின நிகழ்வு வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை நடைபெற்றது. வவுனியா நகரசபையின் உபநகர பிதா சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தமிழ்மணி அகளங்கன் விவேகானந்தர் தொடர்பான நினைவுரையினை ஆற்றியிருந்தார்.

நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், நகரசபை உறுப்பினர்கள், சமூகசேவைகள் உத்தியோகத்தர், பிரதேசசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தக பிரமுகர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வினை தொடர்ந்து வறுமைநிலையிலுள்ள பத்து குடும்பங்களிற்கு தமிழ்விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (9-299)

# இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான நிதி விரைவில் வழங்கப்படும் -மஸ்தான் எம்.பி.

(நெளுக்குளம்)

கட்டடப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்திற்கான நிதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொண்டு வருவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட செயற்பாடுகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் இடம்பெற்று வருகிறது. உண்மையில் கடந்த அரசாங்கத்தின் சரியான திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். இருந்த வீட்டினையும் உடைத்து தற்போது மழை வந்தால் கூட ஒதுங்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனினும் அரசாங்கம் என்ற வகையில் அவர்களிற்கான நிதிகளை விரைவாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

வன்னி மாவட்டங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகளை வரவு-செலவு திட்டத்திற்குள் சமர்ப்பிப்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறேன். எமது பகுதிகளில் உள்ள தேவைப்பாடுகள் எண்ணில் அடங்காதவையாக இருக்கின்றன. அவற்றில் எவ்வளவிற்கு பூர்த்தி செய்ய முடியுமோ அதனை இந்த அரசினூடாக பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்து வருகிறோம்.

குறிப்பாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களது வாழ்வாதாரம் மிகவும் கீழிறங்கியுள்ளது. அவர்களிற்கு வரையறையில்லாத வகையிலும் யாரிடமும் எதிர்பார்க்காத வகையிலுமான ஒரு நிலைமையை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்கிறோம் என மேலும் தெரிவித்தார். (9-299)



முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் மகா வித்தியாலயம் மற்றும் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலியர் சங்கத்தினால் புத்தகப் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

# பாரதம்

## நாடு முழுவதிலும் அமுலானது திருத்தப்பட்ட குடியுரிமைச் சட்டம்

### மத்திய அரசு வர்த்தமானி வெளியீடு

(சென்னை)

மத்திய அரசு கொண்டு வந்துள்ள திருத்தப்பட்ட குடியுரிமை சட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராக பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டத்தின்போது பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக பல்வேறு வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

அத்துடன் குடியுரிமை சட்டத்தை உடனே அமுல்படுத்த மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறு இந்து தர்ம பரிசத் சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதியின் ஒப்புதலை பெற்ற உள்துறை அமைச்சகம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பேருந்து - லொறி மோதல்! 20பேர் பலி; 21பேர் படுகாயம்

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 21 பேர் படுகாயமடைந்துள்ளனர். குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.



உத்தரப்பிரதேசத்தின் பருக்காபாத்தில் இருந்து ராஜஸ்தான் நோக்கி பயணித்த சொகுசுப் பேருந்துடன் லொறியொன்று மோதியது. இதன்போது பேருந்து எதிர்பாராத விதமாக தீப்பற்றி எரிந்துள்ளமையினால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

குறித்த பேருந்தில் 45 பயணிகள் பயணித்த நிலையில், 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் காயமடைந்த 21 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-2)

## அமெ.

## சுலைமா

## வெள்ளை

(வோஷிங்டன்) —

ஈராக் உட்பட மத்தி

சூறையாட ஈரான் இ

தீட்டியதால் தான் கெ


ட்ரம்ப் பகிரங்கமாகத்

ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானை கொலை செய்தது ஏன் என்பது குறித்து வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களை சந்தித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் ஈரானின் இராணுவத் தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டார். ஜனாதிபதி ட்ரம்பின்

## அவுஸ்திரேலிய காட்டுத்தீ; விசாரிக்க விசாரணைக்குழு

### பிரதமர் மொரிசன் திட்டம்



(கன்பெரா)

அவுஸ்திரேலிய காட்டுத்தீ தொடர்பாக உயர் அதிகாரம் கொண்ட விசாரணையை ஆரம்பிக்கவுள்ளதாக பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவைத் தாக்கும் காட்டுத்தீயைக் கையாள்வது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என பல்வேறு விமர்சனங்கள் கடந்த காலங்களில் எழுந்த நிலையில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

கடந்த மூன்று மாதங்களாக உக்கிரமடைந்த காட்டுத்தீ காரணமாக 30 பேர் உயிரிழந்ததுடன் 2 ஆயிரம் வீடுகள் முற்றாக சேதமடைந்தது. மில்லியன் கணக்கான ஏக்கர் நிலம் மற்றும் வன விலங்குகள் அழிவடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் ஒரு அரசியல் ரீதியாக பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகிவரும் நிலையில், தீயைக் கையாள்வது குறித்து றோயல் கமிஷன் என அழைக்கப்படும் ஒரு உயர் அதிகாரம் கொண்ட நீதி விசாரணையை முன்மொழியப் போவதாக மொரிசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அரச ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் மொரிசன், "அது அவசியம் என்று நான் நினைக்கிறேன், அந்த நோக்கத்திற்காக நான் அமைச்சரவை மூலம்ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்வேன், ஆனால் அந்த விசாரணைக்குழு மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களுடன் கலந்தாலோசித்து செய்யப்பட வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## ஜம்மு-காஷ்மீருக்

## 300 தீவிரவாதிகள் ஊடு

### மத்திய உள்துறை

(டில்லி)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக 300 தீவிரவாதிகள் ஜம்மு-காஷ்மீருக்குள் ஊடுருவக் காத்திருப்பதாக மத்திய உள்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை மேலும் கூறியுள்ளதாவது, எதிர்வரும் 26ஆம் திகதி குடியரசு தின விழா நடைபெறவுள்ளது. நாடு முழுவதும் சதித்திட்டங்களைச் செயற்படுத்த 300 தீவிரவாதிகள் ஜம்மு-காஷ்மீரில் நுழைவதற்காக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் காத்திருப்பதாக உளவுத்துறை மூலம் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் அனைவரும் ஆப்கானிஸ்தான் போராளிகள் என்பது தெரியவந்துள்ளது. இதையொட்டி ஜம்மு-காஷ்மீர் பகுதியிலுள்ள இராணுவத்தினர் உஷார் நிலையில் இருக்குமாறு எச்சரிக்கைவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ் துணையோடு இந்த தீவிரவாதிகள் இந்தியாவில் பெரிய அளவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் அவர்களுக்கு ஆப்கான் தலிபன்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் இந்தத் தீவிரவாதிகள் முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்த குறி

## விமானத்தை சுட்டு வீழ்த்திய விவகாரம்; பேரழிவான தவறுக்கு வருந்துகிறோம்

### ஈரான் ஜனாதிபதி கவலை

(டெஹ்ரான்)

தவறுதலாக உக்ரேய்ன் விமானத்தை நடுவானில் ஏவுகணையை பயன்படுத்தி சுட்டு வீழ்த்தியதை ஈரான் ஒப்புக் கொண்டுள்ள நிலையில் இத்தவறுக்கு ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுஹானி தனது ஆழ்ந்த வருத்தத்தை பதிவு செய்துள்ளார். இது தொடர்

# வெளிநாடு

# ...ெ.தூதரகங்களை சூறையாட சதி!

## ...மானை கொலை செய்யக் காரணம்

## ...ளை மாளிகையில் ட்ரம்ப் விளக்கம்

...ன்)

**...ட மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களை ...ரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமான் சதித்திட்டம் ...ான் கொலை செய்ய உத்தரவிட்டேன் என அமெரிக்க ஜனாதிபதி ...கமாகத் தெரிவித்துள்ளார்.**



உத்தரவின் பேரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

காசிம் சுலைமான் ஈரானின் சிரேஷ்ட மதத்தலைவர் அயத்துல்லா அலி காமெனிக்கு அடுத்தபடியாக உயர் அதிகாரம் படைத்த தலைவராக இருந்து வந்தார். இதனால் அவரது கொலை ஈரானை பயங்கரமாக உலுக்கியது. காசிம் சுலைமானின் கொலைக்கு பழி தீர்ப்போம் என ஈரான் சூளுரைத்தது.

அதன்படியே காசிம் சுலைமானின் உடல் அடக்கம் செய்யப்பட்ட மறுநாளே இந்த நிலையில் ஈராக் உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள 4 அமெரிக்கத் தூதரகங்களை தாக்குவதற்கு காசிம் சுலைமான் சதித்திட்டம் தீட்டியதாகவும். அதனாலேயே அவரை கொல்ல உத்தரவிட்டதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களை சந்தித்த ட்ரம்ப், காசிம் சுலைமான் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து முதல் முறையாக உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

சுலைமான் கொல்லப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை போராட்டக்காரர்கள் சூறையாடியது அந்தத் தாக்குதலை ஈரான் தான் நடத்தியது.

அந்தத் தாக்குதலுக்கான ஏற்பாடுகளை செய்தவர் தற்போது உயிரோடு இல்லை. அவர் பக்தாத் தூதரகத்தை மட்டும் குறி வைக்கவில்லை.

இதுதவிர மத்திய கிழக்கு நாடுகளில் மேலும் 3 அமெரிக்க தூதரகங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்துவதற்கு அவர் சதித்திட்டம் தீட்டியிருந்தார். இதுபற்றிய உளவு தகவல்கள் கிடைத்த பிறகே அவரை கொலை செய்வதற்கான உத்தரவை நான் பிறப்பித்தேன் என மேலும் தெரிவித்தார். (ஐ-2)

## ...ருக்குள் ஊடுருவலாம்

### ...துறை எச்சரிக்கை

வைத்திருப்பதாகவும் இந்திய இராணுவ உளவுத்துறையினர் எச்சரித்துள்ளனர். பனிக்காலம் என்பதால் பதுங்கியுள்ள தீவிரவாதிகள் பனி உருகத் தொடங்கும் போது இந்தியாவுக்குள் ஊடுருவ முயற்சிக்கலாம் என்றும் இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஈரான், அமெரிக்கா இடையே ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடைபெற்றது. அதைப்போல் இங்கும் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தலாம் என இராணுவத்தினரை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

...ம்; ...ம்


பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது.

"180 அப்பாவி மக்கள் உயிரிழந்த இந்தப் பேரழிவான தவறுக்கு ஈரான் தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து கொள்கிறது. எனது எண்ணங்களும், பிரார்த்தனை களும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உடனிருக்கும் என ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்து குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது" என்றும் தெரிவித்தார். (ஐ-2)

# மசூதியில் குண்டு வெடிப்பு 15 பேர் உடல் சிதறிப்பலி!

## 20 பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்) பாகிஸ்தானில் மசூதியில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் சிக்கி 15 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவட்டாவில் உள்ள மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு தொழுகை செய்து கொண்டிருந்தனர். அப்போது மசூதிக்குள் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. குண்டு வெடிப்பில் சிக்கி 15 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தனர். இது குறித்து தகவல் கிடைத்ததும் பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து, மசூதியை சுற்றிவளைத்து பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தனர்.

பின்னர் அவர்கள் படுகாயம் அடைந்த நபர்கள் அனைவரையும் மீட்டு அம்புலன்சுகளில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். மசூதியில் நடந்த குண்டு வெடிப்புக்கு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# இலங்கைக்கு பேராபத்து!

## எட்கா ஒப்பந்தத்திலிருந்து உடன் விலக வேண்டும் முன்னிலை சோஷலிச கட்சி முன்னெச்சரிக்கை

(கொழும்பு)

**அமெரிக்கா, ஈரானுக்கிடையிலான பிரச்சினையால் இலங்கைக்கு பேராபத்து ஏற்படக்கூடும் என எச்சரித்திருக்கும் முன்னிலை சோஷலிச கட்சி, நாட்டுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு எட்கா ஒப்பந்தத்திலிருந்து உடனடியாக விலகிக்கொள்ளுமாறும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தது.**



அமெரிக்கா - ஈரான் மோதல் உலகளாவிய ரீதியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அக்கட்சியின் செயலாளர் புபுது ஜெயகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது 2007 ஆம் ஆண்டு அமெரிக்காவுடனான எட்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 2017 ஆம் ஆண்டில் காலவரையறையின்றி நீடித்திருந்தார்.

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவிற்கு நெருக்கடியான நிலைமை ஏற்படும் போது அந்நாட்டுப் படைகள் இலங்கையில் நிலை கொள்வதற்கு வழிவகுக்கும். ஆகவே, ஈரானிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் யுத்த நிலைமை தொடர்பில் நாட்டு மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

அதேபோல், இலங்கை, அமெரிக்காவின் சோபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பட்சத்தில் அமெரிக்க இராணுவம் இலங்கையில் தரித்து நிற்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். இது இலங்கைக்கு பேராபத்தான விடயமாகும். ஏனெனில், ஈரான் -அமெரிக்காவிற்கு ஆதரவான நாடுகளின் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு தயங்கப்போவதில்லை என்று எச்சரித்திருக்கின்றது.

எனவே நாட்டு மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு எட்கா ஒப்பந்தத்திலிருந்து விலகுவதுடன், சோபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# 12 பேரின் உயிரைக் காவுகொண்ட பேருந்து சாரதிக்கு எதிராக 52 வழக்குகள் தாக்கல்!

(பசறை)

பதுளை, பசறை - மடுல்சீமையில் அண்மையில் இடம்பெற்ற விபத்து தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியருக்கு எதிராக 52 வழக்குகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் இந்த விபத்து தொடர்பாக விசாரணை செய்ய உரிய ஆலோசனைகள் மடுல்சீமை பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாக பதுளை பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து பேருந்தின் சாரதி விஜேசிங்க முதியன்சல சாந்தகுமார் என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக 52 வழக்குகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த பேருந்து விபத்துக்குள்ளாகியபோது, அந்த பேருந்தின் வருமான வரிப்பத்திரம் இருக்கவில்லையென்றும் அது தொடர்பாக இ.போ.ச. பதுளை சாலை அத்தியட்சகருக்கு எதிராக வழக்கு தொடரவும் பொலிஸார் தீர்மானித்தனர்.

பதுளை பசறை-மடுல்சீமை பிரதான வீதியின் ஆறாம் கட்டைப்பகுதியில் கடந்த 6ஆம் திகதி மாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 12 பேர் உயிரிழந்ததுடன், 40 பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



**கரணவாய் இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலையத்தில் அண்மையில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. சனசமூக நிலையத்தின் தலைவர் க.சந்திரமோகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் மூலமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (படங்கள்:- மகாலிங்கம்)**

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மேலதிகாரி!

அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவர் வந்தார். "பேசாமல் ஒரு பத்து நாள் லீவு போட்டுவிடலாமா? என்று பார்க்கிறேன்!'' என்றார். "ஏன்?'' என்று கேட்டேன். "என்னுடைய மேலதிகாரி ஒரு கோபக்காரன் சேர்... அவரிடம் வேலை பார்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது சேர்!" என்றார். அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் எல்லாம் ஒரு விடயத்தை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! மேலதிகாரி என்பவர் பெரிய "மகான்" இல்லை! அவரும் ஒரு மானிடப் பிறவிதான். சராசரி மனிதனுக்குள்ள பலம், பலவீனம் இரண்டும் அவருக்கும் உண்டு.

அதனால் அவரைக் கொஞ்சம் அனுசரித்துப் போகப் பழகுவது தான் நல்லது! மேலதிகாரிகளில் பலவகை உண்டு. அதில் முக்கியமாக மூன்று வகை. அதில் ஒரு வகை எப்படித் தெரியுமா? உங்களை ஒரு வேலை செய்கிற இயந்திரமாக மட்டும் நினைக்கிற வகை. இவர்கள் எல்லாம் எப்படி என்றால்... எங்கேயாவது வெளியூர் சென்றிருந்தால் கூட அங்கேயிருந்து போன் செய்வார்கள்...

"அந்த வேலை என்ன ஆனது... இந்த வேலை என்ன ஆனது" என்று! இவர்களுக்கெல்லாம் உங்கள் நலனைப் பற்றியோ உங்கள் குடும்பத்தைப் பற்றியோ அக்கறை இருக்காது. நீங்கள் சொல்லும் யோசனை எதுவும் இவர்களிடம் எடுபடாது. "கொடுத்த வேலையைப் பாரு... நீ எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம்!'' என்பார்கள்.

இவர்களை அனுசரித்துப் போக ஒரே ஒரு வழி... இவர்கள் எதைச் சொன்னாலும் "சரி'' என்று சொல்லிவிட்டு வேலையைக் கவனிக்க வேண்டியதுதான். இவர்களிடம் வேறு எந்தக் கேள்வியும் கேட்டிருக்கக் கூடாது! "ஆமாம் சாமி'' போடுவது கௌரவக் குறைச்சல் இல்லை... அது ஒரு "அலுவலக சௌகரியம்!" அவ்வளவு தான்.

இன்னொரு வகையான மேலதிகாரிகள் எப்படித் தெரியுமா? இவர்களெல்லாம் அலுவலக வேலையைப் பற்றி அதிகமாக கவலைப்பட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள்! தங்களுடைய சொந்த "இமேஜ்" பாதிக்கப்படக்கூடாது என்பதிலேயே கவனமாக இருப்பார்கள். இவர்கள் எல்லாம் அடிக்கடி உங்கள் நலனை விசாரிப்பார்கள். அதே மாதிரி நீங்களும் அவரை விசாரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்!

இந்த வகை அதிகாரிக்கு எல்லாம் புதுவருட வாழ்த்து அனுப்பலாம். பிறந்தநாள் வாழ்த்து அனுப்பலாம். அவருக்கு எங்கேயாவது ஒரு பாராட்டு விழா நடந்தால் முதல் வரிசையில் சென்று அமர்ந்து உங்கள் முகத்தைக் காட்டுங்கள். அலுவலக வேலையை மட்டும் பார்க்கும் பணியாளர்கள் இது மாதிரி அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்க முடியாது.

இன்னொரு வகையான மேலதிகாரிகள் உண்டு. அவர்கள் எப்படி என்றால்... அலுவலக வேலை பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்... தனக்குக் கீழே வேலை பார்ப்பவர்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்! எக்காரணம் கொண்டும் தன்னுடைய "பொசிஸ"னுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

இவர்களாலே கடுமையாக வேலை செய்யவும் முடியாது! தீர்மானிக்கவும் முடியாது! எந்த "முடிவை"யும் எடுக்காமல் அதை எல்லாம் தள்ளிப் போட்டுக் கொண்டே போவார்கள்! இதனாலே என்ன ஆகும் என்றால் இவருக்குக் கீழே வேலை பார்க்கும் உங்களுக்குப் பொறுப்பு அதிகமாகும்! இவர்களிடம் சென்று "பிரச்சினை"யை மட்டும் சொல்லிப் பிரயோசனம் இல்லை... அதற்கான முடிவுகளையும் நீங்களே சொல்ல வேண்டும்... அப்போதுதான் இது போன்ற அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கலாம்! குறைந்தது கெட்ட பெயர் வாங்காமல் காலம் தள்ளலாம்!

அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் முக்கியமாக சில விடயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்! அலுவலகத்தில் நடக்கும் நல்லது, கெட்டது எதுவாக இருந்தாலும் உடனடியாக மேலதிகாரிகளிடம் தெரிவிப்பது நல்லது. மூன்றாவது மனிதர் மூலமாக அதை அவர் அறிந்து கொள்வது நல்லதில்லை! எந்த மேலதிகாரியுமே தான் Surpass செய்யப்படுவதை விரும்புவதில்லை... அதனாலே அவருக்குத் தெரியாமல் மேலிடத்துக்கு மனு எழுதி விடாதீர்கள்!

நீங்களும் உங்கள் மேலதிகாரியும் தொழில் ரீதியாக ஒரே படிப்பு படித்தவராக இருந்தால்... அட்ஜெஸ்ற் செய்து போவது கொஞ்சம் கஷ்டம்தான்... இதை மனதில் வைத்துக் கொண்டு நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதமா? அது அவருக்கும் உங்களுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினை... அதை விளம்பரப்படுத்திக் கொண்டு இருக்காதீர்கள்...அது அவருடைய கோபத்தைக் கிளறும்!

உங்கள் மேலதிகாரி உங்களுடன் படித்தவராக இருக்கலாம்... அதற்காக அவரை எல்லோரும் முன்னால் "அடேய்... கிச்சாமி... எப்படிடா இருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். பொதுவாக அதை யாரும் விரும்புவதில்லை. இவ்வளவையும் உங்கள் மனதிலே வைத்துக் கொண்டு கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்துகொண்டீர்கள் என்றால்... அலுவலகம் உங்களுக்கு அவஸ்தையாக இருக்காது. ஆனந்தமாக இருக்கும்!

ஒரு மேலதிகாரி தன்னிடம் வேலை பார்க்கும் ஒருவரைப் பற்றி மிகவும் பெருமையாகச் சொன்னார். "எங்கள் அலுவலகத்திலே எவ்வளவோ பேர் வேலை பார்க்கிறார்கள்... எல்லோரும் தினமும் வந்து ஏதாவது பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இவர் ஒருவர் மட்டும் இதுவரைக்கும் என்னிடம் வந்து எந்தப் பிரச்சினையையும் சொன்னதே இல்லை... அவர் பாட்டுக்கு வருவார்... வேலை பார்ப்பார்... போவார்!'' என்றார்.

நான் உடனே அவ்வளவு பெருமைக்குரிய அந்த ஊழியரைப் பார்த்துக் கேட்டேன். ''உன்னுடைய மேலதிகாரியிடம் நீ எந்தப் பிரச்சினையையும் கொண்டு செல்வதேயில்லையாமே!" என்றேன். அதற்கு அவர், "ஆமாம் அது ஏனென்றால் அவரால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனாலே அப்படிச் செய்கிறேன்!" என்றார் மிகவும் பொறுமையாக!

# ஐ.தே.க. புதிய தலைமைத்துவத்துடனே பொதுத்தேர்தலை சந்திக்க வேண்டும்

## சஜித்திற்கு ஆதரவாக ஹிருணிகா



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி புதிய தலைமைத்துவத்துடன் பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டும் என்பதையே கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விரும்புவதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார். மேலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்பதே பலரின் நிலைப்பாடாக இருப்பதாகவும் அவர் கூறினார்.**

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியினருடன் பேச்சு நடத்தி, விரைவில் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வொன்று முன்வைக்கப்படும்.

பெரும்பான்மையினர் மாற்றமொன்று ஏற்பட வேண்டும் என்றுதான் விரும்புகின்றார்கள். மாற்றமில்லாமல் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாது என இவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பெரும்பாலும் சஜித் பிரேமதாஸவைத்தான் அனைவரும் விரும்புகின்றார்கள். அத்தோடு, சபாநாயகர் கருஜெயசூரிய தொடர்பாகவும் சிலர் கருத்து வெளியிட்டார்கள்.

இன்னும் சிலர் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டுள்ளார்கள்.

எவ்வாறாயினும், கட்சியில் மாற்றமொன்றை மேற்கொண்டு புதிய தலைமைத்துவத்துடன் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதுதான் அனைவரதும் நிலைப்பாடாக இருக்கிறது.

சஜித் பிரேமதாஸ தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்றுதான் நாம் விரும்புகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும் போது அதுதான் சரியான முடிவாகவும் அமையும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரு இலட்சம் கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகளை வழங்க அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

புகையிரதப் பாதைகளுக்கான ஒரு இலட்சம் கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகளை தயாரித்து விநியோகிப்பதற்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. முப்பது மாத காலத்திற்குள் விரிவான அளவில் குறித்த தொகைச் சிலிப்பர் கட்டைகளை வழங்கும் நோக்கில் குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் புகையிரதப் பாதைகான முக்கிய பலகையாகச் சிலிப்பர் கட்டைகள் பயன்படுத்தப்பட்ட நிலையில் குறித்த பலகைக்கான தட்டுப்பாட்டினை அரச மரக் கூட்டுத் தாபனம் எதிர்நோக்கி வந்தது.

இந்நிலையில் தற்போது நடைமுறையிலுள்ள கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகளை தடையின்றிப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு சிலிப்பர் கட்டைக்குப் பராமரிப்புச் செலவு உட்பட 6 ஆயிரத்து 876 ரூபாய்க்கு ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியது. (இ-10)

# வெளிநாட்டில் உயிரிழந்த இலங்கை மாணவிகள் தகவலறிந்த அத்தை மாரடைப்பால் மரணம்

(அஸர்பைஜான்)

அஸர்பைஜானில் இடம்பெற்ற தீ விபத்து ஒன்றில் இலங்கை மாணவிகள் மூவர் உயிரிழந்த நிலையில், அவர்களில் இருவர் சகோதரிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், குறித்த மாணவிகளின் (சகோதரிகளது) மரண செய்தியை கேட்ட அவர்களின் அத்தை மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிலியந்தலையை சேர்ந்த மாணவிகளின் தந்தையின் சகோதரியே இவ்வாறு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அஸர்பைஜானின் தலைநகரில் அமைந்துள்ள காஸ்பியன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மூன்று இலங்கை மாணவிகள் விஷ வாயுவை சுவாசித்ததால் நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

கடுவலை மற்றும் பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 22 மற்றும் 23, 25 வயதுடைய மல்ஷா சந்தீபனி, தருக்கி அமாயா, தவுசி ஜயவோதி ஆகிய மாணவிகளே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மாணவிகளின் சடலங்களை நாட்டுக்கு கொண்டு வரும் நடவடிக்கையை வெளிநாட்டு அமைச்சு மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரு குழுக்களுக்கிடையில் மோதல்; மாணவர்கள் 12 பேர் மறியலில்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 12 மாணவர்களும் இன்று 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த மாணவர்களை நேற்று முன்தினம் புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரு மாணவர்கள் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குறித்த மோதல் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடு ஒன்றிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வெற்றிக்கு வலிகள் தேவை நூல் அறிமுக நிகழ்வின் போது...**

# இன்று எமது தமிழ்த் தேசிய இனம் இனத்தின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகிறது

## சிறீதரன் சுட்டிக்காட்டு



(முறிகண்டி)

**இன்று எமது தமிழ்த் தேசிய இனம் தனது இனத்தின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நூலக வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது தமிழ் இனம் தனது இனத்தின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றது. அதாவது கிளிநொச்சியில் ஓர் மாணவன் மாற்று திறனாளிகளிற்கான சோலர் மூலம் இயங்கக்கூடிய சைக்கிள் ஒன்றை வடிவமைத்துள்ளார். வவுனியாவை சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் வைத்திய துறைசார் கருவியினை கண்டு பிடித்துள்ளார். இவ்வாறு எமது இனம் தனக்கான சிறப்பு பண்புகளை வெளிப்படுத்தி வருகின்றது. இவ்வாறு பல ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய பலரை இந்த மண் எமக்கு தந்துள்ளது. கிளிநொச்சியை சேர்ந்தவரான வைத்திய கலாநிதி சத்திய மூர்த்தி இன்று ஓர் போதனா வைத்தியசாலையில் பொறுப்பு வாய்ந்தவராக இருப்பதுடன் நேர்மையாக செயற்பட்டமைக்கான விருதினையும் அண்மையில் பெற்றிருந்தார். இக் கட்டான நிலையில் வைத்திய சேவையை மேற் கொண்டமைக்கான சர்வதேச விருதையும் அவர் பெற்றிருந்தார்.

இவ்வாறு பலரை எமது மண் கண்டுள்ளது. இவ்வாறு எமது தேசிய இனம் இன்று மீண்டும் தனக்கான பல சிறப்பம்சங்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. அதற்கு இவ்வாறான நூலக வாசிப்பு பழக்கங்களும் உந்து சக்தியாக அமைந்தது எனவும் இவ்வாறு மீள எழுந்து வரும் எம்மினத்தில் தற்போது காணப்படும் நிலைக்கு ஒற்றுமை வலுச்சேர்க்கும். எமக்குள் காணப்படுவது சகோதர பிரிவுகளே. அதனைத் தாண்டி நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய காலத்தில் தற்போது நிற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-100)

# நாடு முழுவதிலும் அரசிற்கு உரித்தான வைத்தியசாலைகளை நிறுவத் திட்டம்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தான முழுமை பெற்ற வைத்தியசாலைகளை நிறுவுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொழும்பு, கராப்பிட்டிய மற்றும் கண்டி உள்ளிட்ட வைத்தியசாலைகளில் நிலவும் நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் மக்கள் தாம் வசிக்கும் மாவட்டங்களிலேயே தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் சுனில் டி அல்விஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசிற்கு உரித்தான வைத்தியசாலைகள் இதுவரை நிர்மாணிக்கப்படவில்லை.

இதனால் அந்த மாவட்டத்திற்கு உரித்தான பிரதேச வைத்தியசாலைகளிலேயே மக்கள் சிகிச்சைகளைப் பெற்று வருகின்றனர்.

குறித்த வைத்தியசாலைகளில் போதுமான வசதிகள் இல்லாதமையால் மேலதிக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நோயாளர்கள், தூரப்பிரதேசங்களுக்கு செல்ல நேரிட்டுள்ளது.

இந்நிலையில், புதிய திட்டங்களின் பிரகாரம் மாவட்டங்களிலேயே அரசிற்கு உரித்தான வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்து மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது தூர பிரதேசங்களில் இருந்து வந்த மக்களிடம் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே மக்கள் தாம் வசிக்கும் மாவட்டங்களிலேயே தேவையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு வைத்தியசாலைகள் அமைக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

# இருதய நோயாளர்களுக்கான ரிப்லேஸ் ஊசி மருந்து பெறுவதற்கு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இருதய நோயாளர்கள் உயிரிழப்பதைத் தடுப்பதற்கான ரிப்லேஸ் ஊசி மருந்து (40 மி.கி) கொண்ட 20 ஆயிரம் குப்பிகளைப் பெறுவதற்கு கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நிலையியற் பெறுகைக் குழுவின் சிபாரிசுக்கு அமைய இந்தியாவில் இருந்து குறித்த மருந்துக் குப்பிகளை வாங்குவதற்கு 8.75 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்காக சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய சேவை அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ஜ-10)

# இரத்மலானை கொலை விவகாரம் மூன்று சந்தேக நபர்கள் கைது




(இரத்மலானை)

இரத்மலானை பகுதியில் வீடொன்றுக்குள் கூரிய ஆயுதத்தால் மூவர் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இரத்மலானை, மொரட்டுவை மற்றும் பொல்கஸ்ஓவிட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# 2018 இல் கண்டி, மட்டு, அநுராதபுர பொலிஸ் நிலையங்களின் மீதே அதிக குற்றச்சாட்டு!

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அறிக்கையின் படி, கடந்த 2018 ஆம் ஆண்டில் கண்டி, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் பொலிஸ் நிலையங்கள் அதிகளவான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளன. தலா 20 இற்கும் அதிகமான குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி பொல்கஹவெல மற்றும் பதுளை பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக தலா 15 க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மிரிஹான, பாணந்துறை தெற்கு கல்முனை, காத்தான்குடி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் நரமலை பொலிஸ் நிலையங்கள் மீது தலா 10க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 1651 பொது முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் முறைப்பாடுகள் பொலிஸ் நடவடிக்கையெடுக்காத விடயம் தொடர்பானவை, அதிகார துஷ்பிரயோகம் தொடர்பானவை, பாரபட்சம் தொடர்பானவை, தங்களுக்கு எதிராக பொலிஸார் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன் வைத்தமை தொடர்பானது, பொலிஸ் அதிகாரிகளால் தாக்கப்பட்டமை தொடர்பானது, சித்திரவதை முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. பொலிஸ் காவலில் இறப்பு தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

இந்த முறைப்பாடுகளில் 1190 விசாரிக்கப்பட்டு நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் தேவையான நிவாரணம் வழங்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஜ)

# நிரந்தர பீடாதிபதிகளை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்காக நிரந்தர பீடாதிபதிகளை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதனை கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பல வருடங்களாக பதில் பீடாதிபதிகளே பீடாதிபதிகளாக செயற்பட்டதாக அமைச்சின் செயலாளர் சித்ரானந்த தெரிவித்தார்.

இதனால், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், தகுதி வாய்ந்தோருக்கு இன்று இடம் பெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகத்தேர்வில் சித்தியடைபவர்கள், பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஏனைய பிரதான பதவிகளுக்கும் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ)

# தமிழ் மக்கள் இனியாவது சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் செஹான் அறிவுரை



(கொழும்பு)

**தமிழ் - முஸ்லிம் மக்கள் தொடர்பில் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்னவென்பதை சரத் பொன்சேகாவின் கேள்வியினூடாக அறிந்து கொள்ள முடியும். எனவே தமிழ் மக்கள் இனியாவது அரசியல் ரீதியில் சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசாங்கம் இனங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை எனவும் அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் வசதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

தமிழ்- முஸ்லிம் மக்களை ஆதரிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஐ.தே.க. ஆரம்ப காலத்தில் இருந்து அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளையே கட்டவிழ்த்துள்ளது. தேசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரியாக முஸ்லிம் ஒருவரை எவ்வாறு நியமிக்க முடியும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பினார். அரசாங்கம் இனங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. தகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கிய நியமனங்களை வழங்கி வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட கோட்டாய ராஜபக்ஷவிற்கு பெரும்பாலான தமிழ்- முஸ்லிம் மக்களின் வாக்குகள் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு கிடைக்கவில்லை. அதேவேளை தனி பௌத்த சிங்கள வாக்குகளால் மாத்திரம் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. 69 இலட்சம் வாக்குகளில் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஆதரவும் கணிசமான அளவு காணப்படுகின்றன.

ஒரு நாட்டில் வாழும் அனைத்து இன மக்களின் வாக்குகளையும் பெற்று ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவாக முடியாது. ஆனால் ஜனாதிபதியாக தெரிவான பின்னர் அவர் அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராக செயற்பட வேண்டும். இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிப் பிரமாணத்தின் போது நாட்டு மக்களுக்கு தெரிவித்தார்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இந்நாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரது ஆட்சிக் காலம் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிரானது என்று ஐ.தே.க வினர் ஆரம்ப காலத்தில் இருந்து தவறான சித்திரிப்பினை தோற்றுவித்துள்ளார்கள். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உரிய பங்களிப்பை வழங்கியது.

ஒரு இனத்தின் விடுதலைக்காக மாத்திரம் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவில்லை. அனைத்து இன மக்களின் எதிர்பார்ப்புக்களும் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதில்தான் இருந்தது. 30 வருடகால யுத்தம் தோற்றம் பெறுவதற்கு ஐ.தே.கவே வித்திட்டது. மறுபுறம் ஆரம்ப காலத்தில் இருந்து தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஐ.தே.கவே இன அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் எவ்விதமான உரிமைகளும் கிடைக்கப் பெறவில்லை. கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கத்தின் அனைத்து வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொண்டார்கள். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து எவ்வித உரிய தீர்வும் கடந்த அரசாங்கம் பெற்றுக் கொடுக்கவில்லை.

எங்களை இனவாதிகள் என்று குறிப்பிட்டவர்கள் இன்று இனவாத கருத்துக்களை வெளியிட்டுக் கொள்கின்றார்கள். தேசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரியாக முஸ்லிம் ஒருவரை எவ்வாறு நியமிக்க முடியும் என்று சரத் பொன்சேகா கேள்வியெழுப்பியுள்ளமை ஐ.தே.கவின் உண்மைத்தன்மையினை வெளிப்படுத்தியுள்ளது. இனியாவது தமிழ்- முஸ்லிம் மக்கள் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்டு அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் துரோகத்தின் ஏக பிரதிநிதிகள்

## ஆனந்தசங்கரி கடும் விமர்சனம்

(முறிகண்டி)

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்க கோரும் உங்களை துரோகத்தின் ஏக பிரதிநிதிகளாகவும் தியாகத்திற்கு முழுக்க முழுக்க மாறுபட்டவர்கள் என்பதையும் நான் பிரேரிக்கிறேன் என ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உங்களிற்கு எவ்வித உரிமையும் கிடையாது. அந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்தது நான். சேனாதிராஜா எப்படி வந்தார். சம்பந்தன் இந்தக் கட்சியின் தலைவராக எப்படி செயற்படுகின்றார் என்பதும் யாருக்கும் தெரியாது. இவ்வாறு துரோகங்கள் மத்தியில் வந்தவர்கள் இவர்கள்.

தமிழ் மக்களிற்கும் தியாகங்களிற்கும் துரோகம் செய்து விட்டு மீண்டும் ஆணை தாருங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். நீங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஆணையை ஏன் தரவேண்டும். எதற்காக தர வேண்டும்? உங்களை துரோகத்தின் ஏக பிரதிநிதிகளாகவுமம் தியாகத்திற்கு முழுக்க முழுக்க மாறுபட்டவர் கள் என்பதையும் நான் பிரேரிக்கிறேன். நீங்கள் தேர்தலில் பங்கு கொள்ளவோ, மக்களை பிரநிதித்துவப்படுத்தவோ எந்தவித தார்மீக கடமையும் உரிமையும் கிடையாது என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது, வாயை மூடியவர்களாக தேர்தலிலிருந்து ஒதுங்குங்கள். தலைமை மாறவேண்டும். தலைமையை யார் மாற்றியது? எந்த தலைமை இருந்த இடத்தில் எந்த தலைமை இருக்கின்றது? பல்வேறுபட்ட தலைவர்களை கொண்ட தமிழர் விடுதலைகூட்டணியை ஒதுக்கிவிட்டு, சம்பந்தர், சேனாதிராஜா தலைமையிலான தலைமையை இன்று வரை இந்தக் கட்சி கொண்டுள்ளது. சம்பந்தர் ஒருகாலமும் தமிழரசு கட்சியில் இருக்கவில்லை என்பதை நான் பகிரங்கமாக குற்றம் சாட்டுவேன்.

40 வருடமாக இயங்காத கட்சிக்கு 70 ஆம் ஆண்டு கொண்டாடு கின்றனர். சேனாதிராஜா எப்படி வந்தார்? தந்தை செல்வா இருந்த இடத் தில் சேனாதிராஜாவா? இது வேடிக்கையாக இல்லையா? சேனா திராஜாவே கதவை பூட்டிவிட்டு சிரித்திருப்பார்.

உங்கள் ஏமாற்றுகள் எல்லாம் போதும். இனியும் ஏமாற்றாதீர்கள். விடுதலைப்புலிகள் தான் ஏக பிரதிநிதிகள் என கூறி மக்களையும் புலிகளையும் ஏமாற்றி புலிகளை அழித்ததன் பிறகு இப்போது கேட்கின்றார் எங்களிற்கு ஏக பிரதிநிதிகள் அந்தஸ்தை தாருங்கள் நாங்கள்தான் பேச வேண்டும் என்று. தயவு செய்து நீங்கள் மட்டும் பேச வேண்டாம். மற்றவர்கள் பேசட்டும். நீங்கள் என்ன பேசினீர்கள் என்பதும், என்ன பேசுவீர்கள் என்பதும் எமக்கு தெரியும். உங்கள் நிகழ்ச்சி நிரல் என்ன என்பதும் எமக்குத் தெரியும்.

நான் பகிரங்கமான அழைப்பினை விடுக்கின்றேன். தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற அத்தனை பேரும் மீண்டும் இணையுங்கள். எனக்கு வயது 87 ஆகியுள்ளது. இந்த நிலையில் பாரம்பரிய கட்சியினை பாதுகாப்பதற்கான சூழல் தற்போது எழுந்துள்ளது. வெவ்வேறு காரணங்களை கூறி தமிழர் விடுதலை கூட்டணியிலிருந்து பிரிந்து சென்று தமிழரசு கட்சியில் இணைந்தவர்கள் இன்று விட்ட தவறுகளை உணர்கின்றீர்கள் என நம்புகின்றேன்.

இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழலை கருத்தில் கொண்டு மீண்டும் இந்த கட்சியை பலம் மிக்க கட்சியாக செயற்ப டுத்த மீள இணையுமாறு அழைக்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-100)

# நீண்டகால ஆட்சியாளரான ஓமானின் சுல்தான் மறைவுக்கு ஜனாதிபதி, பிரதமர் இரங்கல்



(கொழும்பு)

அரேபிய உலகின் நீண்ட கால ஆட்சியாளரான ஓமானின் சுல்தான் காபூஸ் பின் சையத்தின் மறைவுக்கு இலங்கை இரங்கல் தெரிவித்தது.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் இரங்கல் செய்திகளை ஓமானுக்கு அனுப்பியுள்ளனர்.

அவரது மறைவு தங்களை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் இலங்கை மக்கள் மற்றும் எனது சார்பாக, அரச குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஓமான் மக்களுக்கு இரங்கலைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

அத்தோடு சுல்தான் காபூஸ் பின் சையத்தின் தொலைநோக்குத் தலைமையின் கீழ் கடந்த 50 ஆண்டுகளாக ஓமான் ஒரு முற்போக்கான மற்றும் அமைதியான தேசமாக மாற்றப்பட்டதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அவரது மறைவால் ஓமானும் உலகமும் ஒரு புத்திசாலித்தனமான மற்றும் அர்ப்பணிப்புள்ள தேசியத் தலைவரை இழந்துவிட்டது என்றும் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான நெருங்கிய உறவை வலுப்படுத்துவதில் அவரது பங்களிப்பை எப்போதும் மதிப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில், "நீண்ட ஆட்சிக்காலத்திலும் ஓமானின் பொறுப்பாளராக சுல்தான் இருந்தபோதும் அந்த நாடு சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும், எமது இரு நாடுகளும் மிக அதிகமான தொடர்புகளால் நெருக்கமாகிவிட்டன என்றும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை மக்களுக்கும் ஓமான் மக்களுக்கும் உலகின் பிற பகுதிகளுக்கும் அவர் செய்த பங்களிப்பு நினைவுகூரத்தக்கது என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஓமானை 5 தசாப்தங்களாக ஆண்டு வந்த சுல்தான் காபூஸ் பின் சையத் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தனது 79 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் செய்த பல மோசடிகளை அம்பலப்படுத்தும் கருணா

(ஏறாவூர்)

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கோடீஸ்வரன் ஒப்பந்தங்கள் செய்வது, மரங்களை வெட்டி விற்பது போன்ற வேலைகளை மாத்திரம் செய்ததாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அம்பலப்படுத்தினார்.

வாழைச்சேனை, கல்மடு பிரதேசத்திலுள்ள தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களுக்கான அரசியல் விழிப்புணர்வு கூட்டம் கல்மடு பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் கூறுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கோடீஸ்வரனுக்கு நாங்கள் அம்பாறை பகுதிக்கு சென்றதன் பிற்பாடு நித்திரை இல்லை. மக்களை ஏமாற்றி திரிந்தவர். இவர் ஒப்பந்தங்கள் செய்வது, மரங்களை வெட்டி விற்பது போன்ற வேலைகளை மாத்திரம் செய்தார்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கான எந்த வேலைகளும் செய்வதில்லை. நாங்கள் அம்பாறைக்கு சென்று மக்களுக்கு உதவி செய்யும் வேலையால் பயத்தின் காரணமாக தற்போது சத்தம் போட்டு கொண்டிருக்கின்றார்.

ஏனெனில் மக்கள் விரட்டியடிப்பார்கள் என்று தெரியும். வடக்கு, கிழக்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழர்களை கட்டியெழுப்பும் நோக்கில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி செயற்பட்டு வருகின்றது.

மீனவர் சங்கத்தினை பலப்படுத்தி அதன்மூலம் பல உதவிகளை பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. சமுர்த்தி இல்லாதவர்களுக்கு சமுர்த்தி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

அரசியலைத் திறம்பட பயன்படுத்த வேண்டும் என்பதே எங்களது நோக்கம். அதன் மூலம் பலன் எங்களுக்கு கிடைக்கும். அரசியலைப் பயன்படுத்தாமல் விட்டு ஆதங்கப்படுவதில் எந்த பயனும் இல்லை.

கடந்த கால மைத்திரி, ரணில் அரசாங்கத்தினால் ஐந்து வருடம் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. அரசியல்வாதிக்கு கிடைக்கும் வளங்களை எமக்கு கொண்டு வரவேண்டும்.

ஆனால் அவர்களுக்கு வளத்தினை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை.

தமிழ் தேசியம் என்ற ஆயுதத்தினை வைத்த போது வாக்களித்து பின்னர் கவனிப்பாரற்று கிடக்கின்றோம்.

தற்போது வழங்கப்படவுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்பானது சமுர்த்தி பெறும் மக்களுக்கும் சமுர்த்தி பெறுவதற்கு தகுதியானவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் சமுர்த்தியை நிறுத்தி மக்கள் வேலை செய்



வதே நோக்கம். இந்தச் செயற்பாட்டுக்கு அனைவரும் நேர்மையாக செயற்பட வேண்டும்.

சம்பந்தன் ஐயா ஜனாதிபதித் தேர்தலில் சஜித்திடம் சில கோரிக்கைகளை வழங்கி இதனை நிறைவேற்றினால் ஆதரவு தருவதாகக் கூறினார்.

உங்கள் கோரிக்கையும் வேண்டாம், நீங்களும் வேண்டாம் என்று கலைத்து விட்டார். மூன்று நாள் பேசாமல் இருந்த சம்பந்தன் ஐயா காலையில் அன்னத்திற்கு வாக்களிக்குமாறு கூறினார்.

பணம் வாங்கியுள்ளனர். பணம் பெற்றதும் கொள்கையும் இல்லை, எதுவும் இல்லை. இவர்களை நம்பி கடந்த காலத்தில் மைத்திரிக்கும் தற்போது சஜித்திற்கும் வாக்களித்தீர்கள்.

மைத்திரிக்கு வாக்களித்து எந்த பிரயோசனமும் இல்லை. அவர் கடமைக்கு ஜனாதிபதியாக இருந்து விட்டு சென்றுள்ளார்.

தற்போது உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் நல்ல காலம் உள்ளது. இந்த அரசாங்கம் பத்து வருடம் நீடிக்கும் என மேலும் தெரிவித்தார்.(ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1944

### சுபாங்கி




### கோகுலராம்




### பிரசாந்த்




### ரோகினி




### அஜந்தினி




### ராம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை

# இராஜாங்க அமைச்சர்கள் அதிருப்தி

(கொழும்பு)

**தமக்குரிய பொறுப்புக்களை இதுவரை பகிர்ந்தளிக்காத காரணத்தால் இராஜாங்க அமைச்சர்கள் பலரும் கடும் அதிருப்தியில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

ஜனவரி 10 ஆம் திகதி நிலவரத்தின்படி 15 அமைச்சரவை அமைச்சர்களில் நால்வர் மட்டுமே தமது அமைச்சுப் பொறுப்புக்களை இராஜாங்க அமைச்சர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, டளஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க மற்றுமொரு அமைச்சரே தமக்கு கீழ் உள்ள நிறுவனங்களையும் கடமைகளையும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைத்துள்ளனர். தற்போதைய அரசில் 38 இராஜாங்க அமைச்சர்கள் உள்ளனர். இவர்களில் எட்டுப்பேருக்கு எவ்வித பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெள்ளத்தில் டுபாய் விமான நிலையம் கொழும்பு வரும் விமானங்களும் தாமதம்

(கொழும்பு)

டுபாயில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சில விமானங்கள் அருகில் உள்ள விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன. அத்துடன் சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதுடன் சில விமானங்களின் சேவைகள் தாமதமடைந்தன. பலத்த மழை காரணமாக விமான ஓடுபாதைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பல விமானங்களின் பயணத்தில் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. (இ-7)

# சிங்களம், தமிழ் மொழிகளில் தேசிய கீதம் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழிவகுக்கும்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவது எம் அனைவரது மத்தியிலும் ஒற்றுமையும் அமைதியும் ஏற்படுவதற்கு பெரிதும் வழிவகுக்கும் என்று முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

1949 ஆம் ஆண்டின் பின்னர் 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசியகீதம் பாடப்படுவதை உறுதிசெய்ததுடன், கடந்த 2019 ஆம் ஆண்டுவரை அது பின்பற்றப்பட்டு வந்தது. எனினும் இவ்வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திரதின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசியகீதம் பாடப்படும் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

எனினும் அவ்வாறு வெளியான தகவல்களில் எந்தவொரு உண்மையும் இல்லை என்றும் அத்தகைய உத்தியோகபூர்வ முடிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் அரசதரப்பு மறுப்பு வெளியிட்டிருந்தது.

இத்தகைய பின்னணியிலேயே தமிழ்மொழியில் தேசியகீதம் பாடப்படுவதை ஆதரித்து முன்னாள் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அப்பதிவில் கடந்த 2017 ஆம் ஆண்டு சுதந்திரதின நிகழ்வின் போது தமிழ்மொழியில் தேசியகீதம் இசைக்கப்படும் காணொலியை மேற்கோள் காட்டியிருக்கும் அவர், தேசியகீதம் சிங்கள மற்றும் தமிழ்மொழி ஆகிய இரண்டிலும் இசைக்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

"சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்படுவதை நான் ஆதரிக்கின்றேன். அது அரசியலமைப்பின் அடிப்படையிலானதாகும். ஆனால் சட்டம் என்பதையும் தாண்டி, எம்மத்தியில் ஒற்றுமையையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு அது உதவும்" என்று அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்லும் செயற்பாட்டை ஜனாதிபதியால் தனித்து செய்ய முடியாது - சந்திம வீரக்கொடி

(கொழும்பு)

நாட்டை சரியான பாதைக்கு கொண்டுவரும் செயற்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மாத்திரம் தனித்து செய்ய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நடைமுறை அரசியல் அமைப்புக்கு ஏற்ப பாராளுமன்றத்தை மேலும் பலம் மிக்கதாய் மாற்றுவது அத்தியாவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹபராதுவ பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய



போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)

# செய்தித்துளிகள்

## கடலில் நீராடிய மூவர் உயிரிழப்பு

(வென்னப்புவ)

வென்னப்புவ, கம்மலவெல்ல கடலில் நீராடிய பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் மாலை பிற்பகல் 4.30 மணியளவில், கடலில் நீராடிக் கொண்டிருந்த மாகந்துர, சந்தலங்கா பிரதேசத்திலிருந்து சுற்றுலா வந்த குழுவினரில், மூவர் அலையில் சிக்குண்டு காணாமல் போயிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட தேடுதலில் மூவரின் சடலங்களும் மற்றைய நபரை தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மீட்கப்பட்டு தங்கொட்டுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டதோடு, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## அதிகளவிலான யானைகள் கொல்லப்பட்ட வருடமாக 2019

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கையில் அதிக எண்ணிக்கையில் யானைகள் உயிரிழந்துள்ளதாக சுற்றுச்சூழல் குழுக்கள் தெரிவித்துள்ளன. கடந்த வருடத்தில் மாத்திரம் 361 யானைகள் உயிரிழந்துள்ளன. இலங்கையில் சுமார் 7,500 காட்டு யானைகள் உள்ளன. அவற்றைக் கொல்வது சட்டப்படி குற்றம்.

இருப்பினும் யானைகள் கிராமப்புறச் சமூக மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் நிலை காணப்படுகின்றது.

மின்தடுப்புகள், நஞ்சு, வெடிபொருள் ஆகியவற்றைக் கொண்டு யானைகள் கிராமப்புற மக்களால் கொல்லப்படுகின்றதுடன், தந்தங்களுக்காக வேட்டையாடப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## அசிட்வீச்சுக்கு இலக்கான 8பேர் வைத்தியசாலையில்

புலத்கோஹூபிட்டிய மொரன்தொட்ட பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 8 பேர் அசிட்வீச்சுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு இரண்டு குடும்பங்களுக்கிடையேயான தகராறு காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றது. அசிட்வீச்சுக்கு இலக்கானவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 160 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 280 | 250 | 400 |
| தக்காளி | 300 | 240 | 280 | 220 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 170 | 160 | 140 | 120 | 200 |
| கரட் | 350 | 400 | 480 | 300 | 480 |
| பூசணி | 80 | 70 | 60 | 50 | 80 |
| புடோல் | 180 | 160 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 450 | 250 | 480 |
| பெரிய வெங்காயம் | 160 | 110 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 160 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 160 | 110 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 300 | 220 | 240 | 250 | 250 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 | 350 | 480 |
| பீற்றூட் | 240 | 200 | 240 | 120 | 240 |
| கறிமிளகாய் | 280 | 350 | 260 | 200 | 280 |
| முருங்கைக்காய் | – | 1700 | 1000 | 550 | 1000 |
| போஞ்சி | 200 | 230 | 280 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 260 | 120 | 130 |
| கீரை - 1பிடி | 60 | 40 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 30 | 30 | 60 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 50 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | 170 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 240 | 240 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 130 | 60 | 110 | 80 |

## பழமொழிகள்

- கடுங்காற்று மழைகூட்டும் கடுஞ்சிநேகம் பகைகூட்டும்.
- கடுஞ்சொல் தயவைக்கெடுக்கும்.
- கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
- கட்டிக்கொடுத்த சோறும் கற்றுக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் நிற்கும்.
- கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு.
- கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்.
- கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.
- கண் கண்டது கை செய்யும்.
- கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா?
- கண்டதே காட்சி கொண்டதே கோலம்.
- கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
- கண்டால் ஒரு பேச்சு. காணாவிட்டால் ஒரு பேச்சு.
- கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ?
- கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
- கரணம் தப்பினால் மரணம்.
- கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான்.
- கரும்பு விரும்ப அது வேம்பாயிற்று.
- கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாம்?
- கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
- கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
- கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல.
- கல்லாதவரே கண்ணில்லாதவர்.

## ஆயர் பாடி மாளிகையில்

ஆயர்பாடி மாளிகையில்
தாய்மடியில் கன்றினைப் போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான்
தாலேலோ

அவன் வாய்நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்து தூங்குகின்றான்
ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகின்றான்
ஆராரோ (ஆயர்பாடி...)

பின்னலிட்ட கோபியரின்
கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல்
லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவர் உறங்க
மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா
ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா
ஆராரோ (ஆயர்பாடி...)

நாகப்படம் மீதில் அவன்
நர்த்தனங்கள் ஆடியதில்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான்
தாலேலோ
அவன் மோக நிலை கூட
ஒரு யோக நிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்கவிட்டார் ஆராரோ
யாரவனைத் தூங்கவிட்டார் ஆராரோ (ஆயர்பாடி...)

கண்ணனவன் தூங்கிவிட்டால்
காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ
அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும்
போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ (ஆயர்பாடி...)




# அதி புத்திசாலிகள்



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள்தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.

ஒருநாள் அவர்கள் மரத்தால் ஒரு பெரிய வீடு கட்டத் தீர்மானித்தனர். அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர். அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன் சொன்னான்.

"நான் குதிரை வண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்!" என்றான். எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான். ஆனால், வழியில் அவன் குதிரைவண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது. அவன் கையிலிருந்த கோடரி தூரத்தில் சென்று விழுந்தது. அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர். அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன்தான் என்பதால், அவன் கோடரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர். அதனால், எல்லோரும் மரம் வெட்டுவற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடரியை அப்படியே போட்டுவிட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், யார் கையிலும் கோடரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான்.

"நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம். இப்போது இருப்பதில் நான்தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும். அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" ,என்றான்.

அது மிகவும் நல்ல கருத்துதான் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான். அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான். இப்படியே எல்லோரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை, எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக்கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான். "நண்பர்களே, கிளை இப் போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்!" என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லோரும் கீழே விழுந்தனர். ஆனால், அந்த மரக்கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லாரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

"நண்பர்களே, நாம் இந்த மரத்தின் கீழே தீ மூட்டுவோம். அந்த வெப்பத்தில் கிளை ஒடிந்து கீழே விழுந்துவிடும்!" என்றான்.

எல்லோரும் அது ஒரு சிறந்த கருத்துத்தான் என்று ஏற்றுக் கொண்டனர். அந்த அறிவாளி அவனிடம் இருந்த ஒரே ஒரு தீப்பெட்டியை வெளியே எடுத்தான். ஆனால், அவனுக்கு ஒரு சந்தேகம். தீக்குச்சி ஏரியவில்லை என்றால் என்ன செய்வது? அவன் ஒரு தீக்குச்சியை உரசி பற்றி வைத்துப் பார்த்தான். அது எரிந்தது. ஆயினும் அடுத்த 'குச்சி எரியவில்லையென்றால் என்ன செய்வது? அவனுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது. அடுத்த தீக்குச்சியையும் அவன் பற்ற வைத்துப் பார்த்தான். அப்படி தீப்பெட்டியில் இருந்த எல்லா தீக்குச்சியும்' தீரும்வரை அவன் உரசி உரசிப் பார்த்தான். கடைசியில் அவன் திருப்தியுடன் சொன்னான்.

"தீக்குச்சிகளெல்லாம் தீர்ந்து விட்டன. ஆயினும், என்ன? எல்லா தீக்குச்சிகளும் நன்றாக எரியக்கூடியவைதான் என்று நமக்குத் தெளிவானது அல்லவா?" என்றான். முன்பு மரத்திலிருந்து விழுந்த அறிவாளி, மற்றொரு கருத்தைச் சொன்னான்.

"நண்பர்களே, நான் முன்பு மரத்திலிருந்து கீழே விழுந்த போது என் தலை கிளையில் மோதியது. அப்போது நான் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தேன். அது போன்ற தீப்பொறிகளை வைத்து நாம் இந்த மரத்தை எரிய வைக்கலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் என் தலையில் மாறி மாறி அடிக்க வேண்டும். அப்போது நான் பார்க்கும் தீப்பொறிகளை நீங்கள் உடனே பிடித்துச் சேகரிக்க வேண்டும்!" என்றான்.

நண்பர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். பிறகு அந்த அறிவாளியை மாறி, மாறி அடித்தனர். அடி வாங்கும்போது அவன் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தான். ஆனால், அதையெல்லாம் பிடித்து நண்பர்களிடம் கொடுப்பதற்கு அவனால் முடியவில்லை.

அவர்கள் மீண்டும் கூடி அமர்ந்து சிந்தித்தனர். அவர்களில் ஒருவன் அப்போது நல்லபடியாகச் சிந்தித்தான். அவன் சொன்னான்.

"நண்பர்களே, நாம் திரும்பிச் சென்று, வழியில் போட்டுவிட்டு வந்த கோடரிகளை மீண்டும் எடுத்து வரலாம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை!" என்றான்.

அவ்வாறு அவர்கள் சென்று தங்கள் கோடரிகளுடன் திரும்பி வந்தனர். தேவையான மரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு கிராமத்துக்குச் சென்றனர். தங்களது புத்திசாலித்தனத்தை நினைத்து தங்களை தாங்களே மிகவும் மெச்சிக் கொண்டனர்.

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
– நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நவாலியூர் சோமசுந்தர புலவரின் மீண்டும் தொடங்கும் மிடுக்கு

முன்பெல்லாம் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் வருகின்ற கதைகள், கவிதைகள் மிகுந்த கருத்தாழமும் அர்த்தப்பாடும் கொண்டவையாக இருக்கும்.

இஃது பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் நீண்டு நிலைத்திருந்தது.

*பாலும் சோறும் உண்ணத் தந்து படிக்க வைக்கும் அம்மா* என வித்துவான் வேந்தனின் பாடல் வரிகளை மழலைச் செல்வங்கள் பாடிப் பரவுவது முதல், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் அ.செ.முருகானந்தத்தின் **மனித மாடு** என்ற சிறுகதை அங்கீகரிக்கப்பட்ட அலகாக இருந்தது வரையில், எல்லாமும் மாணவர்களை வாழ்விக்கும் கலைக் களஞ்சியமாயின.

இன்று அந்த நிலைமைகள் ஏதுமில்லை. பாலர் பாடசாலைகளில் மாணவர்கள் பாடுகின்ற பாடல் என்ன என்று எடுத்துச் சொல்ல முடியாத அளவில் நிலைமை உள்ளது.

சுருங்கக்கூறின் நவகாலத்துச் சித்திரம் போல எல்லாவற்றிலும் அவலம் மட்டுமே விழித்து நிற்கின்றன.

என்ன செய்வது காலம் கலியுகம் ஆதலினால் அஃது தன் இயல்பைக் காட்டவே செய்யும் என்ற வகையில் அவற்றை ஒருபுறமாக வைத்து விடலாம்.

எனினும் நம் மண்ணில் வாழ்ந்த பெரியவர்களை எம் மாணவர்கள் அறியாமல், தெரியாமல் இருப்பதுதான் மிகப்பெரிய வேதனை.

இந்த வேதனையைத் தாண்டி ஏதோவொரு வகையில் தமிழ் வளர்த்த சான்றோர்களை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அந்தவகையில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் எங்கள் தமிழ் மண்ணுக்குக் கிடைத்த தங்கத் தாத்தா.

ஜீவகாருண்யம் மிக்க அந்தப் புலவன் நல்லூர்க் கந்தன் மீது பாடிய திருப்புகழ் அற்புதமானது.

ஆலயங்களில் ஆடு வெட்டும் வேள்வியை எதிர்த்த புலவரின் பாடல்கள் அநீதியைக் கண்டு அவர் அடைந்த கொதிப்பைக் காட்டுவதாகும்.

இப்பேற்பட்ட சோமசுந்தரப் புலவர் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கதையை எழுதினார்.

1977ஆம் ஆண்டுகளில் 7ஆம் வகுப்புக்குரிய தமிழ்ப் புத்தகத்தில் அந்தக் கதை இடம் பெற்றிருந்தது.

கடும் வறட்சியான நிலத்தில் ஆழக்கிணறு வெட்டி அதில் இருந்து தண்ணீர் எடுத்து பயிர் செய்து விளைச்சல் விளைய இருந்த நேரத்தில்; சோ என்று மழை கொட்டி வெள்ளம் போட்டு எல்லாப் பயிர்களையும் அழித்துவிட,

அந்த விவசாயி மீண்டும் தன் தோளில் மண்வெட்டியை எடுத்துச் செல்வதாக மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற கதை அமைகிறது.

இந்தக் கதை இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்கும் மிகப் பொருந்தும்.

ஆம், எங்கள் தமிழ் மக்களும் அரசியலில் மீண்டும் தொடங்கும் மிடுக்காகச் செயற்பட வேண்டியுள்ளது.

இந்த மிடுக்கு தமிழ் மக்களுக்கான சரியான அரசியல் தலைமையைத் தீர்மானிப்பதாக இருப்பதே பொருத்துடையது.

# யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வவு.பல்கலைக்கழகமாக மாற்ற அமைச்சரவைப் பத்திரம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வவுனியா பல்கலைக்கழகமாக மாற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்துள்ளதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கு. திலீபன் தெரிவித்தார்.

நேற்று அவர் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்;

வவுனியா வளாகத்தை வவுனியா பல்கலைக்கழகமாக மாற்ற கடந்த ஆட்சிக்காலத்தில் பலரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் முயற்சி எடுத்தவர்கள் ஏமாற்றப்பட்ட வரலாறே காணப்பட்டது. இவ்வாறு ஏமாற்றப்பட்ட விடயம் வவுனியா வளாகத்தின் செயற்பாட்டில் மாத்திரமல்ல தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளில் இருந்து அனைத்திலும் ஏமாற்றப் பட்டனர்.

இந் நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது தமிழ் மக்கள் தொடந்தும் ஏமாற்றப்படக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளார்.

ஒவ்வொரு செயற்பாட்டையும் மக்கள் நலன் சார்ந்து செயற்படுத்தி வருவதனாலேயே இன்று மக்கள் அமைச்சரின் பின் அணி திரண்டு வருகின்றனர்.

அந்த வகையில் வவுனியா வளாகத்தினை வவுனியா பல்கலைக்கழகமாக மாற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு தற்போது அமைச்சரவை பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே விரைவில் வவுனியா வளாகம் வவுனியா பல்கலைக்கழகமாக மாறும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவித்தார்.

(ம-3,299)

# இலவசப் பொங்கல் பொதி

(யாழ்ப்பாணம்)

சங்கானை பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் இலவசப்பொங்கல்பொதி வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30-4.30 வரை இடம் பெறுமெனச் சங்கத்தின் தலைவர் ர.இராசகரன் தெரிவித்தார்.

இப் பொதிகள் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் சங்க முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

(ம-3,104,10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ்.நுண்கலைப்பீடம், புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3 ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் P.S.C ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பெரியதம்பனையிலிருந்து மடு வரைக்கும், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# மூன்று வயதுச் சிறுமி விபத்தில் படுகாயம்

## எழுதுமட்டுவாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுக் காலை பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று வயதுச்சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளியைச் சேர்ந்த சி.யாசினி என்ற சிறுமியே இவ்வாறு படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது பேருந்தில், தனது பேர்த்தியுடன் சென்று வீடு திரும்புகையில் வீதியைக் கடக்க முற்பட்டவேளை கிளிநொச்சிப்பகுதியில் இருந்து வருகை தந்த பேருந்துகுறித்த சிறுமியை மோதியுள்ளது.

படுகாயமடைந்த சிறுமி சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


(ம-3,10,114)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நிம்மதியைத் தேடி அலைவதில் பயனில்லை. அது உங்கள் நெஞ்சுக்குள்ளே இருக்கிறது.**
**-பாரதிதாசன்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பெற்றோர் தவம்- பிள்ளைகள் நலம்



மருத்துவம் என்பது நோய் வந்த பிறகு தீர்ப்பது மாத்திரம் அன்று. நோயே வராமல் காக்கலாம். நோய் என்றால் என்ன? இயற்கையாக நம்முடைய உடலிலே இந்தச் சுகத்திற்கு, அதாவது உடல் நலத்திற்கு ஏற்ற எல்லாம் அமைந்து இருக்கிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற குறையைக் கூட சரிக்கட்டிக் கொள்ளக் கூடிய அளவுக்கு இயற்கையினுடைய ஆற்றல் அமைப்பு நம் உடலிலே இருக்கிறது. ஒவ்வொரு செல்லும் (Cell) ஒரு இரசாயனச் சாலையாக (Laboratory) வேலை செய்து கொண்டு இருக்கிறது நம்முடைய உடலிலே. நாம் அதைத் தெரிந்து கொண்டு ஒத்துழைத்தால் போதும் அதைக் கெடுக்காமல் இருந்தால் போதும். அதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருவமைப்புக் குறித்தும் அதிகமாக நினைவில் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் எந்த முறையிலே மனம், உடல் அமைப்பிலே இருக்கின்றார்களோ அதை ஒட்டித்தான் ஒரு குழந்தை உருவாக முடியும். மரத்தை ஒட்டித்தான் விதை இருக்கும். அந்த விதையை ஒட்டித்தான் மரம் இருக்கும். இது தொடர் நிகழ்ச்சி.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், பெற்றோர்கள் மன நலத்திலே, உடல் நலத்திலே நலம் உள்ளவர்களாக அமைய வேண்டும் இருக்க வேண்டும். பெற்றோர்கள் இடத்திலே ஒருவருக்கு ஒருவர் பிணக்கு, மனத்தாங்கல் இருக்குமேயானால், நமது உடலிலே முக்கியமான சக்தியாகிய சீவகாந்த ஆற்றல் பிணக்குற்று அது விஷத் தன்மையாக மாறக் கூடியதாகவே அமையும். அது குழந்தைகளையும் பாதிக்கும். ஆகவே, மனநலமும், உடல் நலமும் காத்து இனிமை காப்போம்.

# வீரர்களிடையே முரண்பாட்டை விதைக்காதீர்; இலங்கையுடனான வெற்றிக்குப்பின் விராட்கோலி



இலங்கைக்கு எதிரான கடைசி 20 ஓவர் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

வெற்றி குறித்து இந்திய அணி கேப்டன் விராட்கோலி கூறியதாவது.

இந்த ஆண்டின் தொடக்கம் நன்றாக அமைந்துள்ளது. சரியான முறையில் ஆட்டத்தை தொடங்கி இருக்கிறோம். ஒரு ஆட்டத்தில் 'சேசிங்' செய்தோம். மற்றொரு போட்டியில் முதலில் பட்டிங் செய்தோம். 2 போட்டியிலும் ஆட்டத்திறன் அபாரமாக இருந்தது. எனவே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

200 ரன்னை தொட்டதும் நம்பிக்கை அதிகரித்தது. எங்களது தொடக்கம் நன்றாக இருந்தது. ஆனால் மிடில் ஓவரில் விக்கெட் சரிந்ததால் சவாலாக அமைந்தது. ஆனால் மனீஷ் பாண்டேயும், ஷர்துல் தாகூரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

180 ரன்தான் எதிர்பார்த்தேன். ஆனால் 200 ரன்னை குவித்தோம். இது மாதிரியான நிலை நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

முதலில் தற்காலிகமாக பட்டிங் செய்யும் அணியாக நாங்கள் இருக்க விரும்பவில்லை. 2 ஆவது பட்டிங் செய்யும் போது எவ்வளவு நம்பிக்கையுடன் இருக்கிறோமோ அது போல முதலில் ஆடும் போதும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

3 தொடக்க வீரர்களும் வலுவாக உள்ளனர். அவர்கள் அணிக்காக சிறப்பாக ஆடுகிறார்கள்.

அவர்கள் பற்றி சிலர் விருப்பங்களை தெரிவிக்கிறார்கள். தொடக்க ஆட்டக்காரர்கள் பற்றி ஒருவருக்கொருவர் எதிராக பேசுவதை நிறுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இது அணி சார்ந்த விளையாட்டு. அணியில் உள்ளவர்களை ஒருவருக்கொருவர் எதிர்த்து நிற்பதற்கான யோசனைகளை தெரிவிப்பதை நான் ஆதரிக்கவில்லை. இவ்வாறு விராட்கோலி கூறியுள்ளார். (க)

## நியூசிலாந்துடனான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஹர்த்திக் பாண்டியா வெளியே, விஜய் உள்ளே



உடற்பயிற்சி தேர்வில் தோல்வியடைந்ததை அடுத்து ஹர்த்திக் பாண்டியாவிற்கு மாற்றாக தமிழக வீரர் விஜய் சங்கர் அணியில் இடம்பிடித்துள்ளார்.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள "இந்திய ஏ" அணி, இரண்டு 50 ஓவர் போட்டி மற்றும் 2 நான்கு நாள் டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்த சுற்றுப்பயணத்திற்காக காயத்திலிருந்து மீண்டு வந்த சகலதுறை வீரர் ஹர்த்திக் பாண்டியாவின் பெயர் முதலில் இடம்பிடித்திருந்தது.

ஆனால் மும்பையில் நடத்தப்பட்ட உடற்பயிற்சி சோதனையில் அவர் தோல்வியடைந்ததால், அவருக்கு பதில் தமிழக ரஞ்சி அணியின் தலைவர் விஜய் சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் அறிக்கையின்படி, ஹர்த்திக் இரண்டு கட்டாய உடற்பயிற்சி சோதனைகளில் தோல்வியுற்றார் மற்றும் அவரது மதிப்பெண்கள் சர்வதேச கிரிக்கெட்டுக்கு பொருத்தமானதை விட குறைவாக இருந்தது.

எனவே, அவருக்குப் பதிலாக விஜய் சங்கர் மாற்றப்பட்டார் என தெரிவித்துள்ளது. (க)

## இந்திய அணியுடன் அதிக தோல்விகள் மலிங்க படைத்த மோசமான சாதனை



இந்திய அணிக்கெதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்ததன் மூலம், அந்த அணியின் தலைவர் மலிங்க மோசமான சாதனை படைத்துள் ளார்.

இலங்கை அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மூன்று இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் இந்திய அணி 2-0 என்று முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றியது. மலிங்க தலைவராக இருந்து இலங்கை அணி தோல்வியடைந்த 14ஆவது போட்டியாகும். இதன் மூலம் மலிங்க மோசமான சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

மலிங்க தலைவராக இருந்த 22 இருபது-20 போட்டிகளில் இலங்கை 8 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் இருபது-20 போட்டிகளில (குறைந்த பட்சம் 20 போட்டிகள்) குறைந்த வெற்றியை பதிவு செய்த தலைவர்களின் வரிசையில் மலிங்க இப்போது முதலிடத்திலுள்ளார்.

இவர் 31.8 சதவீதத்துடன் முதலிடத்திலும், இதற்கு அடுத்தபடியாக வங்கதேச அணி வீரரான ஷகிப் அல்ஹசன் 33.3 சதவீதம், முஸ்தபிசுர் ரஹீம் 34.8 சதவீதம், மஸ்ரபே மோர்தசா 35.7 சதவீதம், மேற்கிந்திய தீவு வீரரான கார்லஸ் பரத்வெயிட் 36.7 சதவிதத்துடன் அடுத்தடுத்து உள்ளனர். (க)









தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான 2020 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் பூப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் அணியில் டச் வீதி தென்னகத்தாரகை அணி சம்பியனானது. இரண்டாம் இடத்தினை புத்தூர்ச்சந்தி சீமா விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் வளர்மதி முதலாம் இடத்தினையும், சங்கத்தானை சி.ஆர்.சி.விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

வலைப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் அணியில் மட்டுவில் மோகனதாஸ் சம்பியனை சுவீகரிக்க, அல்லாரை டெல்ரா விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெள்ளாம் போக்கட்டி ஒளிர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், கோவிலாக்கண்டி ஸ்ரீ மகா விஷ்ணு விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. (க-30)

# ரூ. 2 1/2 கோடி பெறுமதியான போதைப்பொருட்களுடன் 3 பேர் கைது

(கொழும்பு)

சுமார் 2 கோடியே 51 இலட்சம் பெறுமதியான போதைப் பொருட்களுடன் மூன்று பேர் தெமட்டகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்குரியவர்களிடமிருந்து ஒருகிலோவும் 634 கிராம் ஹெரோயினும், 403 கிராம் ஐஸ் போதைப்பொருளும் 573 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் 24 முதல் 42 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என குறிப்பிடப்படுகிறது.

அவர்கள் நாளைய தினம் மாளிக்காகந்தை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ம-3)

## இயக்கச்சி...

பற்றப்பட்டது.

குறித்த பெண் பளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு மேலதிக விசாரணையை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100,315)

## 13ஆவது அரசி...

வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளதாக குறித்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை அல்ல என வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிறுபான்மை இன மக்கள் நீண்ட காலமாக குரல் கொடுத்து வருகின்றனர்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மாற்ற வேண்டும் எனக் கூறும் ஜனாதிபதி 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு என்ன செய்வார் என்பதை கூற முடியாதுள்ளது என்பது குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## தமிழ் பேசும்...

பாடப்பட்டு வந்த நிலையில், இவ்வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திரதின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசியகீதம் பாடப்படும் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் அவ்வாறு வெளியான தகவல்களில் எந்தவொரு உண்மையும் இல்லை என்றும், அத்தகைய உத்தியோகபூர்வ முடிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் அரச தரப்பு மறுப்பு வெளியிட்டிருந்தது.

எனினும் இவ்விவகாரம் குறித்து சமூகவலைத்தளங்களில் தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் பெரும்பான்மையான தமிழ்பேசும் இலங்கையர்கள், தாம் இலங்கை நாட்டிற்கு உரியவர்கள் என்பதால் தேசிய கீதத்தை தமிழ்மொழியில் இசைப்பதற்கு விரும்புகின்றார்கள் என்று ஊடகவியலாளரொருவர் அவரது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கருத்தை முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கோள் காட்டியிருக்கிறார். (ம-3)

## 19ஆம் அரசியல...

தெரிவித்துள்ளார்.

வானொலி நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குவதற்கு 3 இல் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுமாயின் அதற்கு தமது ஆதரவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வழங்கப்போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பேச்சுவார்த்தை நட...

துள்ளார். திகதி வழங்கப்பட்டால் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு செல்வோம்.

வடக்கு மாகாணத்திற்கான புதிய ஆளுநருக்கு முழுமையான ஆதரவை வழங்கி அவருடன் சேவையாற்ற தயாராகவுள்ளோம்.

இரா.சம்பந்தன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ள போதிலும் தேசியப் பட்டியலில் அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவரவுள்ளோம்என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-3)

## இரும்பகக் கடையில்...

ணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இச் சம்பவத்தால் கடையில் இருந்த பொருட்கள் சேதமடைந்துள்ள நிலையில் கடையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,10)

## சிறுமி துஸ்பிரயோ...

கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை அச்சுவேலி பகுதியில் பதுங்கியிருந்த சந்தேகநபரான இளைஞர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறை, வல்லிபுரம் பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## முல்லை மூங்கிலாற்றில் மோ.சை...

தில் குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பலியானவர் முகாமைத்துவ பீடத்தில் பேராதனியா பல்கலைக் கழகத்துக்கு தெரிவான உடையார்கட்டு மூங்கிலாறு தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த ஆனந்தராசா பிரசன்னா (வயது 24) என்பவராவார். விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,9)

## பிரதமர் மோடியை சந்திக்க...

இது புதிய அரசாங்கத்தின் உறுப்பினர் ஒருவரின் மூன்றாவது உயர்மட்ட விஜயமாகும்.

அதன்படி பெப்ரவரி மாத தொடக்கத்தில் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் திகதிகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தவும், நாட்டை குறிப்பாக வடக்கு கிழக்கு மலையகத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு நிதி உதவிகளை வழங்கவும் இந்தியா ஆர்வமாக உள்ளது.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனை அடுத்து கடந்த வாரம் தான், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்தியாவிற்கு வழங்கிய உறுதிமொழியான அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் பிரதமரின் இந்த விஜயம் அமையவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கடந்த மாத இந்திய விஜயத்தின்போது, 13 ஆவது அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா கேட்டுக்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஈரான் அரசுக்கு எதிராக பாரிய...

டங்களை மேற்கொண்டுள்ளனர்.

தெஹ்ரானில் அமெரிக்க தூதரகத்திற்கு அருகில் உள்ள அமீர் கபீர் பல்கலைகழகத்திற்கு வெளியே பெருமளவானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ஈரானின் ஆன்மீக தலைவர் ஆயத்தொல்லா அலி கமேனியை பதவி விலகுமாறும், விமானம் வீழ்த்தப்பட்டமைக்கு காரணமானவர்களை தண்டிக்குமாறும் கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்புவதை காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் கொல்லப்பட்டவர்களிற்கான அஞ்சலி நிகழ்வே ஆர்ப்பாட்டமாக மாறியுள்ளது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிற்கு அமெரிக்க ஜனாதிபதி தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

துணிச்சலான,நீண்ட காலமாக துயரத்தில் சிக்கியுள்ள ஈரான் மக்களிற்கு, நான் எனது ஜனாதிபதி பதவிக்காலத்தில் ஆரம்பம் முதல் நான் உங்களிற்கு ஆதரவாகியிருந்துள்ளேன் என டிரம்ப் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார். (ம-3)

## அமெரிக்க இராஜதந்திரி இன்று...

அந்தவகையில் அவரது இந்த வருகையின்போது நிறுத்தப்பட்ட மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் ஒப்பந்தம் குறித்து விவாதிக்க வாய்ப்புள்ளதாக அறிய முடிகின்றது.

அந்தவகையில் இலங்கைக்கு வரும் அவர், கொழும்பில் மூத்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து இருதரப்பு மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இதன்போது ஜனநாயகம், நீதி, மனித உரிமை பிரச்சினைகள் மற்றும் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் பகிரப்பட்ட நலன்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

அத்தோடு புதிய அரசாங்கம் இதுவரை கையெழுத்திட மறுத்துவிட்ட மிலேனியம் சவால்கள் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் விவாதிக்க வாய்ப்புள்ளதாக அமெரிக்க வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தை மதிப்பாய்வு செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளதால், இந்த ஒப்பந்தத்தை பரிசீலிக்க அமெரிக்கா இலங்கைக்கு கால அவகாசம் அளிக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை உதவி செயலாளர் ஆலிஸ் வெல்ஸ் 15 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்வார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)


அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 850 — வர்ணம் : பச்சை — சீட்டிழுப்பு திகதி: 2020.01.12 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,559,910/- — வெற்றி இலக்கங்கள் 25 35 37 63 X

ஜய — B 02 40 46 50 — சீட்டிழுப்பு வாரம் 545 — வர்ணம் மஞ்சள் — திகதி 12/01 2020 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,221,190 — தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1108 — சீட்டிழுப்பு திகதி 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை — Z 16 36 51 56 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,551,308

ராசி அதிர்ஷ்டம் — திகதி 12.01.2020 — வெற்றி வாரம் 2736 — வர்ணம் ஊதா — வெற்றி இலக்கங்கள் மீனம் 15 28 37 60 — திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,561,514 — 2020/01/13 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும் — வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் — தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 12-01-2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2359 — T 37 46 74 76

மஹஜன சம்பத — திகதி 2020/01/12 — சீட்டிழுப்பு இலக்கம் 4090 — T 7 7 0 0 4 7

தன நிதானய — திகதி - 12.01.2020 — சீட்டிழுப்பு இலக்கம் - 0251 — Y 4 6 34 74

நீரோகா — திகதி 2020/01/12 — சீட்டிழுப்பு இலக்கம் 648 — மிதுனம் 02 12 16 17

## A/L 2020 Day Class

புவியியல் - N.BABU

- அலகு ரீதியிலான மீட்டல்
- வாராந்தம் பரீட்சைகள்
- புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

ஆட்ஸ் அக்கடமி - புத்தூர்

DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C.C.A - சுன்னாகம்

077 936 5087 (1816)



## போட்டிப் பரீட்சை

மாலைநேர வகுப்புகள்

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்

திங்கள் (இன்று) செவ், வியாழன்

பி.ப 3.30 - 6.00

SLAS Ltd

திங், செவ், வியா

பி.ப 5.00 - 7.00

T.P-076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100 M தூரத்தில்) (C-8981)



## ஹொமானியா ஹொட்டேல் வேலைவாய்ப்பு



Cook/Cook Helper
Waiter/Bartender
Cleaner/Dish

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்

சம்பளம் US $ 450 - 500 81,700 - 90,785

மூன்று அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய

விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!

எமரல்ட் ஐல் License No. 2268

077 00 38 215
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். இஷாரா ரெக்ஸ் - ரீன் கேர்ஸ் அருகே

www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## மேட்டுக் காணி, வயற்காணி விற்பனைக்கு

உருத்திரபுரம் மேற்கு இல.65 வீட்டுடன் 3 ஏக்கர் மேட்டுக் காணியும் இரு போகம் செய்கை மேற்கொள்ளக்கூடிய நீர்ப்பாசனம் உள்ள 04 ஏக்கர் வயற்காணியும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- தேவராசா இராசம்மா

077 871 7021 (C-8975)



## மணமகள் தேவை

39 வயது, உத்தரநட்சத்திரம் கிரக பாவம் 50 6" இடத்தில் சூரியன் செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகனுக்கு A/L சித்தி யடைந்த அழகிய மணமகள் தேவை. (1854)

தொடர்பு

077 327 6253



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1836)



## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8786)



## A/L 2022 தமிழ்

ஆரம்பமாகிவிட்டது

பா. பத்மநாதன்

B.A (Hons) Tamil Spl - 1st Class, M.A (Tamil) - 1st Class
M.Ed (Hons) - 1st Class, Dip in Ed

அனுமதிகள் வழங்கப்படுகின்றன (1839)

| | |
|---|---|
| C.C.A - சுன்னாகம் | மொடேண்- சண்டிலிப்பாய் |
| சித்திவிநாயகர் - மல்லாகம் | மகுடம் - உரும்பிராய் |



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-8876)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
- மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS


## மரண அறிவித்தல்

## லிங்கப்பிள்ளை கிருபாகரன்

### (கிருபா, ராசன்)

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Fribourg ஐ வதிவிடமாகவும் கொண்ட லிங்கப்பிள்ளை கிருபாகரன் அவர்கள் கடந்த 07.01.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லிங்கப்பிள்ளை - கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு புத்திரனும் அருள்நாதன் - சசி கலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் அனுசாவின் அன்புக் கணவரும் ரேவதி, சிறீவதி, வீரராகவன், கலாவதி, பிரபாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிர மணியம், பேரின்பநாதன், நளாயினி, ஆனந்தகுமார், கணேஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சமரன், சயானா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பிரதீபன், சஜோபா, சயிந்தினி, திருக்குமரன், தீபிகா, தினுசன் ஆகியோரின் அன்பு மாமாவும் அமரர் சுந்தரலிங்கம் மற்றும் மகேஷ்வரி, சண்முகராசா - சிவமலர், அமரர்களான மாணிக்கவாசகர் - அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும் அமரர் வைரமுத்து மற்றும் அழகம்மா, அமரர் சிவசம்பு மற்றும் கதிர்மலர், சற்குணநாதன் - இராஜேஸ்வரி, சிவராசா - பரமேஸ்வரி, குணசேகரம் - கோகிலாதேவி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2020) செவ்வாய்க்கிழமை Ruedv temple 1700 Fribourg, Switzerland என்ற முகவரியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராகவன் (சகோதரன்)
+41779829094
ரேவதி 0212214273, 0770245549
கலாவதி (சகோதரி) 0778517924 (1861)

தகவல்: சகோதரி
(பாலசுப்பிரமணியம் ரேவதி)
8ம் வட்டாரம்,
மண்டைதீவு.


## ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்

அனுபவம்மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொ.பே:- 077 658 9443

யாழ்ப்பாணம் (1859)



## காணி விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு றோட்டில் புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து 150 மீற்றர் தொலைவில் முதலாவது வலது பக்கமாக செல்லும் வீதியில் ¼ ஏக்கர், ½ ஏக்கர் பிரிவிட்ட குடியிருப்பு காணித் துண்டுகள் (அறுதி உறுதி காணி) உடன் விற்பனைக்குண்டு. வீட்டுத்திட்டத்துக்கும் ஏற்றது (1857)

தொடர்பு:- 071 847 5531, 077 724 2362


## வரணியில் தீ விபத்து

(கரணவாய்)

தென்மராட்சி வரணிப் பகுதியில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் வரணி வாழைத் தோட்டம் பகுதியில் உள்ள பனங்கூடலில் தீ விபத்து ஏற்பட்டது.

இதில் தீ கொழுந்து விட்டு எரிந்த நிலையில் யாழ் தீ அணைப்பு படையினர் விரைந்து சென்று ஒரு மணித்தியால போராட்டத்தின் பின் தீ கட்டுப்பாட்டிற்குள் கொணடு வரபபட்டது. (ம-3,60)


## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம். (C-8979)

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413



## Nithiya's Active Queens

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்காக மட்டும்!

பெண் பயிற்றுவிப்பாளரினால் முதன்முறையாக

- உடல் எடை குறைத்தல்
- கட்டுக்கோப்பான உடலமைப்பு
- ஆரோக்கியமான வாழ்வு
- Physical Excercises
- Diet Plan
- Aerobic Dancing

(வயது எல்லை கிடையாது)

People's Bank Building 2nd Floor,
Stanley Road, Jaffna.
Ph.num - 076 840 8628 (1858)



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

(C-8956)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.